ஸ்ரீ

தமிழரசு.

வணக்கம்.

அங்கயற்கண்ணம்மை.

"பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
இங்கெமக் கருள வல்ல விணையிலா வெம்பி ராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை யடிக்கம லங்கள் போற்றி."

பெரும்பற்றப்புலியூர் நம்பி.

மலர்-க. } உருத்ரோத்காரி௵ மார்கழி௴ 1923௵ டிசம்பர் 1924 ஜனவரி௴ { இதழ்-ரு.

(கதாசரித்சாகரம்.)

வரருசி சரிதம்.

(48-ம் பக்கத் தொடர்ச்சி.)

பின்னர் வரருசி தம்கிரஹத்தையடைந்து தம்முடைய மாதாவையும்குருவையும் வணங்கித்தமக்குஉண்டாகியபரமசிவனுடையஅருளை அவர்களுக்குக்கூறினர். அவர்களால் அவர்உபகோசையின்தீரச்செயலைக்கேட்டு அவளுடைய கற்புடைமைக்கும் புத்திசாதுர்யத்திற்கும் வியந்துஅவளுடன் சேர்ந்து இல்லறத்தை நடத்திவந்தனர். வர்ஷர் வரருசியின் வியாகரணத்தைக்கேட்க இச்சைகொண்டார். வரருசி தம் ஆசிரியருடைய கருத்திற்கிசைந்து அவ்வியாகரணத்தைஅவருக்குக் கூறிக்கொண்டு வரும்பொழுதே குமாரக்கடவுளுடைய வரத்தினால் எல்லாம் தாமே வர்ஷருக்குத் தெளிவாக விளங்கிற்று. பின்னர் வியாடியும் இந்திரதத்தனும் தமதுகுரு வர்ஷரை யடைந்து வணங்கி, வாய்புதைத்து நின்று "சுவாமி! தேவரீருடைய திருவருளால் அடி-

யோங்கள் கலைகளையெல்லாம் பெற்றுக் கல்வியறிவுள்ளவர்களாயி னோம். அதன்பொருட்டு அடியோங்கள் குருதக்ஷிணை கொடுக்க விரும்புகிறோம். எவ்விதமான தக்ஷிணையை அடியோங்கள் செய்ய வேண்டும் என்பதைத் தேவரீர் ஆஞ்ஞாபித்தருள வேண்டுகிறோம்'' என்றனர்.

வர்ஷர் அதனைக்கேட்டு, ''மாணவர்களே! நீங்கள் எனக்குத் தக்ஷிணையாகக் கோடி பொன் நாணயங்கள் கொணர்ந்து கொடுங்கள்'' என்று கூறினார். அதனைக்கேட்டு வியாடியும் இந்திரதத்தனும் வாருசியை நோக்கி, ''நாம் அரசனான நந்தனிடம் சென்று கோடி பொன்கேட்டுப் பெற்றுக்கொண்டு வருவோம். அவன் தொண்ணூற் றொன்பதுகோடி பொன்னுக்கு அதிபதியாக விளங்குகின்றான்; அவ னிடத்திற்கு நாம் மூவரும் சென்று பொன் நாணயங்களைப் பெற்று வருவோம்'' என்றார்கள். அவ்வாறே வாருசியும் அவர்களுடன் புறப் பட்டுப் பாடலிபுரத்தின் அரமனையில் அரசனைச் சென்று விசாரிக்க அவன் அயோத்திக்குப் போயிருப்பதாக உணர்ந்து அங்கே சென் றார்கள். அவர்கள் சென்றவேளை அரசனான நந்தன் இறந்துகிடக்க இராஜ்யம் மிக்கவருத்தத்துடன் கவலைப்பட்டுக் கொண்டிருந்தது. அதனை யறிந்த அம்மூவரும் இனி நாம் செய்வது என் என்று கரு திக்கொண்டிருக்கையில் யோகசித்தி கைவந்த இந்திரதத்தன் மற்ற இருவரையும் நோக்கி ''நண்பர்களே! நாம் வந்தவேளையில் இடையூ றும் உடன்வந்து சேர்ந்தது. எவ்விதத்திலும் நாம் குருதக்ஷிணை கொடுத்தாக வேண்டும். அதன்பொருட்டு நான் என்னுடைய யோகசக்தியால் இந்த என்னுடைய சரீரத்தை விட்டொழித்து இறந்துபோன நந்தனுடைய சரீரத்தில் பிரவேசிக்கின்றேன். பின்னர், அரசனுடைய உடல் உயிர் பெற்று எழுந்திருக்கும். அப் பொழுது இவ் வாருசி அவ்விடத்தில் வந்து, ''ஆசார்ய சம்பாவனைக் காகக் கோடி பொன் கொடுக்கவேண்டும்.'' என்று என்னிடத்திற் கேட்கட்டும். நான் அவ்விதமே கொடுக்கும்படிசெய்துவிட்டுத்திரும்ப வும் இவ்வுடலில் வந்துநுழைந்து கொள்கின்றேன். அதுவரையி லும், இவ்வியாடி இந்த என்னுடைய சரீரத்திற்கு யாதொரு பழு தும் வாராமல் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்'' என்று கூறி னான். இந்திரதத்தன் கூறியது பொருத்தமுள்ளதாக இருந்தமை

யால் மற்றவர்களும் அதற்குடன்பட்டனர். அப்பொழுது அவர்கள் அருகிலிருந்த ஒருகோயிலை யடைந்தனர். அங்கே இந்திரதத்தன் தன் சரீரத்தைத்துறந்து அரசனுடைய சரீரத்தில் பிரவேசித்தான். வியாடி அங்கே இந்திரதத்தனுடைய உடலினைக் காப்பாற்றிக்கொண்டிருந்தனன்.

இப்பால் அரசன் உயிர்பெற்றுத் தூங்கி எழுந்திருப்பவன் போல எழுந்தான். வாருசி அரசனையடைந்து "அரசனே! நான் வர்ஷர் என்று பெயர்வாய்ந்த ஆசிரியரின் மாணாக்கன். என்பெயர் வாருசி என்பதாம். ஒருகோடி பொன் நான் அவரிடத்தில் கற்றகல்விக்குக் குருதக்ஷிணையாக வேண்டும் என்று அவரால் கேட்கப்பட்டு உன்னை வந்தடைந்தேன். உனக்கு வெற்றியுண்டாகுக. நீ எனக்குக் குருதக்ஷிணையின் பொருட்டுக் கோடிபொன் நாணயங்கள் கொடுத்திடவேண்டும்" என்று கேட்டார். உடனே யோகநந்தன் முன் நந்தனுடைய உண்மையான மந்திரியாகிய சகடாலன் என்பவனை விளித்து "அமைச்சனே! நீ இவருக்குக் குருதக்ஷிணைக்காக ஒருகோடி பொன் நமது தனசாலையிலிருந்து கொடுக்கும்படி செய்வாய்" என்று உத்தரவிட்டான். சகடாலன் என்னும் அமைச்சன் மிகவும் கூர்த்த மதியுள்ளோனாதலால் இறந்த அரசன் உடனே உயிர் பெற்றெழுந்ததையும் அவனிடத்தில் அப்பொழுதே ஒருவன் கோடி பொன் பெற்றுச் செல்ல வந்திருப்பதையும் ஆராய்ந்து அறிந்து "இதில் ஏதோ ஏமாற்றம் நடந்திருக்கிறது. யோகசித்தி கைவரப்பெற்ற மஹா புருஷன் ஒருவன் அரசனுடைய சரீரத்தில் பிரவேசித்திருக்க வேண்டும்" என்று தெளிந்துகொண்டான். காரியங்களைக் காரணங்களுடன் பகுத்தறியும் அறிவுள்ள பெரியோர்களுக்கு அறியமுடியாத பொருளுமொன்றுண்டோ!

சகடாலன் யோகநந்தனிடத்தில் "அவ்விதமே செய்கிறேன்" என்று வணங்கிக் கூறிவிட்டுத் தனக்குள் "நந்தனுடைய புதல்வன் பருவமுறாச்சிறுகுழந்தை. இராஜ்யமோ பல பகைவர்களையுடையதாயிருக்கிறது. இந்த நிலைமையில் அரசன் இல்லாது போயின் பகைவர்களால் தேசம் அழிவுறும்; இவ்விராஜ்யத்தை அரசனுள்ளதாகச் செய்யவேண்டும்; நான் இம்மறையவருக்கு இப்பொழுதே பொருள்

கொடுத்து விடுவேனுனல் அரசனுடலிற் புகுந்துள்ள யோகபுருடன் தன் காரியமுடிந்துவிட்டது என்னும் காரணத்தினுல் இவ் வுடலினை விட்டு வெளியேறி விடுவான்; அங்ஙனம் அவன்புறப்படும்படி நாம் செய்தல்கூடாது; அதற்கு, முதலில் நான் இவ்விராஜ்யத்தில் இப்பொழுது காணப்படும் உயிர்நீங்கிய உடல்களையெல்லாம் கொளுத்தி விடும்படி செய்யவேண்டும்" என்றுகருதிஎவ்வெவ்விடங்களில் உயிர் நீங்கிய உடல்கள் இருக்கின்றன என்று பார்த்துவரும் வண்ணம் சில ஒற்றர்களையேவினுன். இவன் இங்ஙனம் செய்வதைக் குறிப்பாலறிந்த யோகநந்தன் சகடாலனையழைத்து "இன்னும் என் மறையவருக்குப் பொருள் கொடுபடவில்லை. விரைவில் கொடுக்கும்படி செய்வாய்" என்று உத்தரவிட்டான். அதற்குச் சகடாலன் "அரசே! இப்பொழுது ஊரில் திருவிழா நடக்கிறபடியால் அரமனையிலுள்ள பரிஜனங்கள் யாவரும் அதிலேயே கண்ணுயிருக்கின்றனர். அதனுல் பொருள் கொடுப்பதற்குச்சிறிதுகாலம் நீட்டித்தது. இதோ கொடுக்கும்படி செய்கிறேன்" என்று கூறிச் சென்றுன்.

சென்ற சகடாலன் ஒற்றர்களால் நகரையடுத்துள்ள ஒரு கோயிலில் உயிர்நீங்கிய உடலொன்று இருக்கின்றது என்றுஅறிந்து அங்கே சென்று வியாடியிடத்திலிருந்து பலவந்தமாக அவ்வுடலை யெடுத்துப் போய்க் கொளுத்திவிடும்படி செய்தான். அதனை யோகநந்தன் அறிந்து மிக்கதுயரத்தையடைந்தான். பின்னர்ச்சகடலான் தன் காரியத்தை நன்ருகச்செய்து முடித்துவிட்டு ஒருகோடி பொன்னுணயங்களை வாருசிக்குக் கொடுக்கும்படி செய்தான்.

யோகநந்தன் பற்றுக்கோடற்றவனுகி வியாடியை நோக்கி "நண்பனே! நான்வேதியனுக இருந்தும் இப்பொழுது சூத்திரனுடைய சரீரத்தில் பிரவேசித்து சூத்திரத்தன்மையை யடைந்தேன். இவ்விராஜ்யமோ நிலையற்றது. அங்ஙனமன்றி நிலையுள்ளது என்று கருதினுலும் மேலான நிலைமையிலிருந்தும் தாழ்வையடைந்தஎனக்கு இதனுல்யாது பயனுண்டாம்" என்று கூறி வருந்தினுன். வியாடி அதனைக்கேட்டு யோகநந்தனை ஒருவாறுதேற்றி அவனை நோக்கி "நண்பனே! இவ்விளைவுகளெல்லாம் நுட்ப புத்தியுள்ளவனுன சகடாலன் என்னும் அமைச்சனுல் விளைந்தன என்று நீ அறிந்து கொள்

வாய். அவன் இப்பொழுது தன் எண்ணத்தின் வண்ணம் நடக்கக் கூடிய முதன் மந்திரியாக இருக்கின்றான். கூடிய விரைவில் உன்னை அரசிலிருந்து விலக்கிக் கேட்டினையுண்டுபண்ணிப் பழைய நந்தனுடைய புதல்வனான சந்திரகுப்தன் என்பவனை அரசனாகச் செய்து விடுவான். அதற்கு நீ இடம் கொடாமல் வாருசியை முதன் மந்திரியாகச் செய்துகொள்வாய். அதனால் இவ்விராஜ்யம் உன்னைவிட்டு நீங்காமல் நீடித்த நாள் நிலைத்து நிற்கும். நீ இராஜ போகங்களை அனுபவித்துக்கொண்டிருக்கலாம்'' என்று அக்காலத்திற்கேற்ப அவனுக்கு உரைத்துவிட்டு வாருசியிடத்திலுள்ள கோடிபொன்னையும் பெற்றுக்கொண்டு குருதக்ஷிணை கொடுப்பதற்காக வியாடி சென்றுவிட்டான். பின்னர்யோகநந்தன் வியாடி கூறிய வண்ணமே அப்பொழுதே வாருசியை வாவழைத்து முதன் மந்திரித்தன்மையை அளித்தான்.

வாருசி முதன் மந்திரியானவுடன் யோகநந்தனை நோக்கி ''அரசனே! நீ உன்னுடைய பிராமணத் தன்மையை யிழந்துவிட்டாய். இப்பொழுது இவ்விராஜ்ஜியத்தினால் உனக்குக் கொஞ்சம் மரியாதை நடக்கிறது. இவ்விராஜ்யமோ சகடாலன் நல்ல நிலைமையில் இருக்கும் வரையிலும் உன்னுடையது இல்லை என்று கருதவேண்டும். ஆதலின் சகடாலனுக்கு ஏதாவது கேட்டினையுண்டாக்க வேண்டும்'' என்று கூறினான். வாருசி கூறியவற்றை யோகநந்தன் கேட்டு ''இந்தச் சகடாலன் உயிருடன் கூடிய ஒரு வேதியனைக் கொளுத்திவிட்டான்'' என்று ஒரு குற்றத்தையவன்மேல் சுமத்தி அவனை அவனுடைய நூறுபிள்ளைகளுடனும் இருளே மிகுந்துள்ள பாழ்ங்கிணறொன்றில் தள்ளினான். அக்கிணற்றிலுள்ள அவர்கள் நூற்றுவருக்கும் ஒரு சிறு பாண்டத்தில் தண்ணீரும் ஒருவர்க்குபயோகப்படக் கூடிய வெறும் உணவும் யோகநந்தன் அளித்துவரும் வண்ணம் செய்தான். கிணற்றிலுள்ள சகடாலன் அவ்வுணவினையும் நீரினையும்பெற்றுத் தன் மக்கள் நூற்றுவரையும் நோக்கிப் ''புதல்வர்களே! இவ்வுணவோ நம் மனைவருக்கும் போதுமானதாக இல்லை. இது ஒருவருக்கே உபயோகப்படும். ஆதலின் நம்மை இவ்விதம் கொடுமைசெய்தயோகநந்தனைக் கொடுமைக்குட் படுத்தக்கூடிய வல்லமைபொருந்தியவன்

எவனோ அவன் ஒருவன் இவ்வுணவினையுண்டு காலம் கழித்துவாட்டும். மற்றவர்கள் உணவின்றியிறக்க வேண்டியதே" என்றுபரிதாபமாகக் கூறினன். அதனைக் கேட்ட புதல்வர்கள் யாவரும் "தந்தையே! யோகநந்தனைப் பிரதி செய்யக்கூடிய வல்லமை எங்களில் ஒருவருக்கும் இல்லை. நீர் ஒருவர்தாம் அதற்குத் தகுதியுள்ளவர். ஆதலின் நீரே இவ்வுணவினையுண்டு உயிர்பெற்று வாழ்ந்திரும். நாங்கள் இறந்துபோகிறோம்" என்று இரங்கத்தக்க வண்ணம் கூறினர்கள். அவர்கள் கூறியதைக் கேட்டவுடன் சகடாலன் அவர்களையணைத்துக் கொண்டு கோவென்றலறியழுது வருந்தினன். தான் உயிர் வாழ விரும்பினன். தன்மக்களை யிழக்கத் துணிந்தான். எவ்விதத்திலும் தனக்குத் தீமைசெய்த யோகநந்தனுக்குத் தீமைசெய்வது என்று உறுதிகொண்டான்.

"உற்ற விடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கிற்
றளர்ந்து வளையுமோ தான்."

என்பது மூதுரையே யன்றோ? அங்ஙனமே சகடாலன் ஒருவனே தினந்தோறும் அவ்வுணவினையுண்டு, பசியால் பீடிக்கப்பட்டுத் தன்னெதிரிலேயே உணவின்றியிறக்கும் தன் மக்களைக்கண்டு ஆற்றொணத்துன்பம் கொண்டு அங்கே கிடந்தான்.

இப்பால் வியாடி தான் கொண்டுபோன பொன்னை வர்ஷருக்குக் குருதக்ஷிணையாகக் கொடுத்துவிட்டுத் திரும்பவும் யோகநந்தனிடம் வந்து அவனிடத்தில் தான் தவம் செய்யப்போவதாகக் கூறினன். அதனைக்கேட்ட யோகநந்தன் வியாடியைக்கட்டிக்கொண்டு தழுதழுத்த குரலுடன் "நண்பனே! நீ யென்னைவிட்டுச் செல்லுதல் தகாது. நீயே இவ்விராஜ்யத்தை யாண்டு அனுபவிப்பாய். இவற்றையெல்லாம் அனுபவித்துக்கொண்டு எனக்குத்துணையாக இருப்பாய்" என்று கெஞ்சினன். வியாடி அதற்கு உடன்படாமல் "இச்சரீரம் நிலையற்றது; இது இருக்கும் பொழுதே ஆத்மாவுக்கு நன்மையைத் தேடிக்கொள்ள வேண்டும்" என்று கூறிவிட்டுத் தவம்செய்யச்

சென்றான். பின்னர் யோகநந்தன் அயோத்தியிலிருந்தும் இராஜதானியான பாடலிபுரத்திற்கு வந்துசேர்ந்தான். அங்கேயவன் பலவிதமான இராஜபோகங்களையெல்லாம் அனுபவித்து மகிழ்ச்சியோடிருந்தான். வரருசியின் மனைவியான உபகோசை மந்திரியான தன் கணவருடன்கூடி மகிழ்ந்திருந்தாள். வரருசியின் தாயாரும் ஆசாரியர்களும் வரருசியுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தனர். வரருசிக்கு ஸரஸ்வதியானவள் பிரத்தியக்ஷமாக இருந்து அவன் செய்யவேண்டிய காரியங்களில் அவனுக்கு உதவிசெய்து வந்தாள்.

இஃதிங்ஙனமாக, யோகநந்தன் நாளடைவில் காமம் முதலியவற்றின் வசமாகத்தொடங்கினான்.

> "செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்
> சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்
> வெல்வதே நினைவ தல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
> வல்வினை விளைவு மோரார் மண்ணில்மேல் வாழு மாந்தர்."

என்பது அனுபவம் வாய்ந்த பெரியோர்களின் உறுதிமொழியல்லவா? அரசன் தீயவழியை நாடத்தொடங்கவே வரருசி, "ஆ! இவ்வரசன் நாசத்தையடைவான். இவனால் நம்முடைய காரியங்கள்யாவும் வீணாகுமே? ஆதலின் நாம் இந்த விஷயத்திற்குத் துணைவன் ஒருவனையேற்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்குத்தக்கவன் சகடாலனே. அவனைக் கிணற்றிலிருந்தும் எடுத்து இங்கே மந்திரியாக நியமித்துக் கொள்ளலாம். அவன் அரசன்செய்த தீமையினால் கோபம் மூட்டப்பட்டிருந்தாலும் நாம் இருக்கும்பொழுது அவன் ஒன்றும் செய்யமாட்டான்" என்றுகருதி யோகநந்தனை நோக்கி "அரசனே! சகடாலனுக்குச் செய்த தண்டனைபோதும். அவனை அக்கிணற்றிலிருந்து வெளியில் எடுத்துவிடும்படி செய்வாய்" என்று வரருசி கூறினான்.

அரசன் தன் மந்திரி கூறியவண்ணமே சகடாலனைக்கிணற்றிலிருந்து வெளிவரும்படி செய்தான். சகடாலன் வந்தவுடன் வரருசியவனை யுபசரித்துத் தன்னுடன் அவனும் மந்திரியாக இருக்கவேண்டும் என்று கூறினான். சகடாலனுக்கு யோகநந்தன் கீழிருப்பதற்கு மனமில்லையானாலும் அவன் தனக்குச்செய்த தீமைக்குப்பிரதி செய்யவேண்டும் என்னும் எண்ணத்தினாலும் வரருசியின்மொழியை

மறுக்க எண்ணமில்லாமையாலும் தனக்கு நல்ல காலம் வரும்வேளையை எதிர்பார்த்து அரசனிடம் தொழிலில் அமருவதாக ஒப்புக்கொண்டு முன்போல மந்திரி வேலையைப் பார்த்துவந்தான்.

இங்ஙனமிருக்க, ஒரு நாள் யோகநந்தன் உலாவி வருதற்காக நகரத்தின் வெளியில் புறப்பட்டான். அப்பொழுது வாருசியும் மற்றப் பரிவாரங்களுடன் உடன் சென்றனர். யாவரும் கங்கைக் கரையோரமாகப் போகையில் கங்கையில் ஐந்து விரல்களும் ஒன்றாகச் சேர்ந்துள்ள ஒரு கை நீரின் நடுவில் தோன்றியது. அரசன் அதனைக் கண்டு இது என்ன என்று வாருசியை வினவ, வாருசி அப்பொழுது தன்னுடைய இரண்டு விரல்களை அக் கையிருக்கும் திசையில் காண்பித்தான். உடனே நீரில் தோன்றிய கை மறைந்துவிட்டது. அரசன் வியப்புற்றுத் திரும்பவும் வாருசியை நோக்கி 'இது என்ன' என்று வினவினான். அதற்கு வாருசி 'ஐவர் ஒன்று சேரும் பக்ஷத்தில் அவர்களால் கூடாதது இவ்வுலகத்தில் என்ன இருக்கிறது.' என்னும் கருத்துடன் அக்கை ஐந்து விரல்களை நீரின்மேல் காட்டிற்று என்றான். அரசன் வாருசி இரண்டு விரல் காட்டியதும் அது மறைந்ததன் கருத்தும் என்ன என்று வினவ, வாருசி 'இவ்வுலகில் இருவர் ஒரே மனமுள்ளவர்களாக ஆவார்களே யானால் அவர்களால் சாதிக்க முடியாததும் உண்டோ' என்னும் கருத்துடன் தன்விரல்கள் இரண்டைக்காட்ட அது மறைந்தது என்று தெளிவித்தான். உடனே அரசன் வாருசியினுடைய மறைந்தபொருள்களையும் அறியும் அறிவைக் கண்டு வியந்தான். சகடாலனும் வாருசியினுடைய அறிவைக் கண்டு இவனை வெல்ல முடியாது என்று மனத்தில் கருதிப் புகழ்ந்தான்.

பின்னர் ஒருநாள் யோகநந்தன், தன் பட்டமஹிஷி மேல்மாடத்தின் சாளரவழியாக அவ்வூருக்குப் புதிதாகவந்த ஒரு மறையவனைப் பார்ப்பதைக்கண்டு ஒன்றையும் ஆராயாமல் அம்மறையவன் மேல் கோபம்கொண்டு அவனையுடனே கொன்றுவிடும்படி உத்தரவிட்டான். சினமும் அதுபற்றியுண்டாகும் பகையும் ஒருவனுடைய அறிவை மழுங்கச்செய்யும் கருவிகளாம். அரசன் உத்தரவின் வண்ணம் அம்மறையவனைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகும் பொழுது வழியிலிருந்த சந்தையில் உயிரற்று உலர்ந்துகிடந்த ஒரு மீன் சிரித்தது. [தொடரும்] பத்திராசிரியர்.

திருஞான சம்பந்தர்.

(60-ம் பக்கத் தொடர்ச்சி.)

திருநாவுக்கரசு நாயனர் திருப்பூந்துருத்தியில் இருக்கின்றாரென ஞானசம்பந்தர் கேள்வியுற்று அவ்வூருக்குச் சென்றார். அளவற்ற வைபவத்துடன் திருஞான சம்பந்தர் முத்துச்சிவிகையின்மீது எழுந்தருளிவந்ததை அப்பர் கண்டு பேரானந்தமடைந்து எவர்க்குந் தெரியாது முத்துச்சிவிகையைத் தாங்கிவந்தார். திருஞான சம்பந்தர் அங்குள்ளாரை "எமதப்பர் எங்குளார்?" எனவினவினர். அப்பர்கேட்டு "அடியேன் அடிகள் சிவிகைதாங்கியுளேன்" எனக்கூறப் பிள்ளையார் கேட்டுச் சிவிகையினின்றும் கீழே குதித்து அப்பரை வணங்கியுபசரித்தார். அங்குஇருவரும் சிலநாள் அளவளாவியிருந்தார்கள். பிறகு திருஞான சம்பந்தர் அப்பரிடம் விடைபெற்றுக்கொண்டு அத்தலத்தை நீங்கித் தம் சொந்த ஊராகிய காழிமாநகர்க்கு வந்தடைந்தார். தினந்தோறும் அவர் தோணியப்பரை வணங்கிக்கொண்டு சிலதினம் அங்குறைந்திருந்தார்.

ஆளுடைய பிள்ளையார், தூயோர் பிறப்பிடமாகிய தொண்டைநாட்டுத்தலங்களுக்குச் சென்று தரிசிக்கவேண்டுமென நினைந்து பிரயாணமானார். பலவிடங்களையும் கண்டு தரிசித்துக்கொண்டு திருவோத்தூர் எனும் தலத்துக்கு வந்தடைந்தார், ஆங்கோர் அடியார் "இவையனைத்தும் சிவபிரானுக்கே உரியது" எனச்சொல்லி அநேகம் பனைமரங்களை வளர்த்துவந்தார். அவற்றில் ஒன்றாவது காய்க்கவில்லை. அதுகண்ட சமணர்கள் அவ்வடியாரைப் பார்த்து "காயாத பனை எங்காகிலும் உண்டா? சும்மா இருந்தாலும் இவைகள் காய்க்கும். சிவனுக்கு என்று வைக்கப்போய் ஒன்றும் காய்க்கவில்லை" என்று அவனைப் பழித்துப் பரிகாசம் பண்ணினார்கள். அன்புமிகுந்த அவ்வடியார் மிகவும் வருத்தத்துடன் சென்று ஞானசம்பந்தப் பெருமானிடம் தெரிவித்தார். உடனே அவர் வண்டமிழ்ப்பதிகமொன்றுபாட அப்பனைகள் குலை குலையாய்க் காய்த்தன. பெருமான் திருவாக்கால் புகழப்பட்டதொரு பெருமையால் அவைகள் தம்

பிறப்பையேயொழித்து நற்கதியும் பெற்றன. பிறகு அங்கிருந்து புறப்பட்டுத் திருவாலங்காடு, திருக்காளத்தி முதலாயுள்ள பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு திருவொற்றியூர் வந்தடைந்தார்.

அவர் அங்கிருக்கும் நாளில், திருமைலாப்பூரில் வடக்கிறைவன் போல வளம்பலபடைத்த வணிகருக்குள் சிவநேசன் என்றோர் வணிகன் இருந்தான். அவன்பேறுகள் அனைத்தும் பெற்றிருந்தும் முதற்பேருகிய மக்கட்பேறின்றி மிகவும் வருத்தமுற்று அறம் பல புரிந்துவந்தான். சிவபெருமான் திருவருளால் அவனுக்கோர் பெண் மகவுண்டாயிற்று. அவள் அழகில் பூமகளே போன்றிருந்தமையால் பூம்பாவையென அழைக்கப்பட்டாள். அவள் அழகுக்கொத்த குணமும் உடையவளாயிருந்தாள். அவளை ஓர் சிறந்த சிவனடியாருக்கு மணம்செய்விக்க வேண்டுமென அவள் தந்தைகருதி வெகுநாளா யெதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் திருஞான சம்பந்தரைப் பற்றிக் கேள்வியுற்றதும் அவருக்கே அவளை மணமுடிக்க வேண்டுமென நினைத்திருந்தான். ஒருநாள் அப்பாவை பத்திமிகக்கொண்டு சிவபெருமானுக்கு அணிவதற்காகப் புஷ்பமெடுக்க ஒரு நந்தவனத்துக்குச் சென்றிருந்தாள். அவள் பூப்பறித்துக்கொண்டிருக்கும் போது ஓர் நாகம்தீண்ட அதனால் விஷம் தலைக்கேறி யாவிசோர்ந்தாள். தந்தை கேட்டு வல்லவரைக்கொண்டு எவ்வளவோ சிகிச்சை பண்ணிப்பார்த்தான். ஒன்றும் பலியாதுபோக அவளாருயிர்துறந்தனள்.

சிவநேசன் கண்டு அளப்பருந் துயரிலாழ்ந்து அவளுடலைத் தகனம்செய்து என்புகளையெல்லாம் எடுத்து ஒரு பொற்குடத்திலிட்டு அக்குடத்தை யாடையணிகளால் அலங்கரித்துக் கன்னிமாடத்தில் வைத்திருந்தான். "அவளைச் சிறுவயதிலேயே ஞானசம்பந்தப் பெருமானுக்கென்று எண்ணியிருந்தேனாதலின் அவர் இங்குப் போந்து என் சொல்கின்றாரோ அதன்படி செய்தல்வேண்டும். அவர் வருமளவும் இவ்வாறேயிருக்கட்டும்" எனப்பேணி வந்தான். திருவொற்றியூரிலே ஞானசம்பந்தர் வந்துளாரெனச் சிவநேசன் கேள்வியுற்று விரைந்தவண்சென்று பிள்ளையார் விரைமலர்த்தாளில் வீழ்ந்து நமஸ்கரித்து அவரைத் தன்னூருக்கெழுந்தருளுமாறு வேண்டினான்.

அவரும் இசைந்தருளினர். திருவொற்றியூர் முதல் திருமயிலைவரை பந்தலிட்டுப் பட்டாடைகட்டியலங்கரித்தான். வாழையும் கமுகும் நாட்டியழகுறச் செய்தான். வழியெல்லாம் தோரணமும் மாலைகளும் தொங்கின. காழியர்கோனை அழைப்பதேபோலக் கொடிகள் அசைந்தாடின. ஆளுடைய பிள்ளையார் அடியார் திருக்கூட்டத்துடன் மயிலை வந்தடைந்தார். சிவநேசன் எதிர்கொண்டழைத்துவந்து ஓர் மடத்தில் இறங்கச்செய்தான். சிவநேசன் மிகுந்த மனவருத்தத்துடன் பிள்ளையார் மருங்கில் நின்றுகொண்டிருந்தான். சிவநேசன் வருத்தத்தைக்கண்ட அடியார்கள் பிள்ளையாரிடத்தில் அவன் நோக்கத்தைத் தெரிவித்தார்கள். உடனே பிள்ளையார் சிவநேசனை அப் பொற்குடத்தைக் கோயின் முன் கொண்டுவருமாறு ஆணையிட்டார். சிவநேசன் வேகமாய்ச்சென்று குடத்தையோர் சிவிகையில் வைத்து மூடிக் கோயின் முன் கொண்டுவந்தான். என்னாகுமென்பதைப் பார்க்கும் பொருட்டு அன்பர்கள், அவ்வூரார், சமணர்கள் இன்னும் மற்றுளார் யாவரும் ஆண்டுவந்தீண்டினர்கள்.

ஞானசம்பந்தப் பெருமான் உடனே கோயிலுக்குட் சென்று சிவபெருமானை வணங்கிக்கொண்டு அக்குடம் வைத்திருக்கும் இடத்தை வந்தடைந்தார். சிவபெருமானை மனதில் தியானம்பண்ணி "மட்டிட்டபுன்னை" எனும் தேவாரப் பதிகத்தைப் பாடினர். பாடவும் அப்புத்தமுதம் பூம்பாவையின் என்பிற்பட்டது. முதற் பாட்டைப் பாடிமுடிக்கவும் அவ்வென்பு சரீரமானது; எட்டாம் பாடலைப் பாடவும் பன்னிரண்டு வயதுள்ள பாவையானது; பத்தாங் கவியைப் பாடவே பெண்வடிவாய் உயிர்பெற்று வெளிவந்தனள். தேவர்கள் கண்டு புஷ்பமாரி பொழிந்தார்கள். அன்பர்கள் எல்லாம் ஆரவாரித்தார்கள். சமணர்கள் கண்டு வெட்கமடைந்தோடினர்கள். சிவநேசன் கண்டு அளவற்ற சந்தோஷத்தையடைந்து ஆடினன், பாடினன், தேகஞ் சிலிர்க்கநின்றான். பூம்பாவை தாமரையை நாடிநிற்கும் இலக்குமியேபோல மிகுந்தநாணத்துடன் கூப்பிய கரத்துடன் பிதாவின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். திருஞான சம்பந்தர் சிவநேசனைப் பார்த்து "நின்மகளை நின்னில்லத்திற்கழைத்தேகுதி" எனஆஞ்ஞாபிக்க அவன் வணங்கிநின்று "ஸ்வாமி! யான் மக்கட்பேறின்றி

வெகுநாள் வருந்தி அரும்பெருந்தவங்கள் ஆற்றி இவளை மகளாகப் பெற்றேன். இவளை அன்றைக்கே தேவரீருக்குத் திருமணம் முடிக்கிறது என்று தீர்மானித்திருந்தேன். ஆகையால் அடிகள் இவளையேற்றருளல் வேண்டும்'' எனப்பிரார்த்தித்தான். பிள்ளையார் "வணிகர் பெரும! நீ கூறுதல் சாலவும்நன்று. ஆனால் நீ பெற்றுவளர்த்த அவள் விடத்தால் இறந்தாள். இவளையான் படைத்தேன். ஆதலால் அவள் எனக்கு மகளேயாவள். ஆதலின் மணத்தல் முறையல்ல'' என்றெடுத்தோதினர். சிவநேசன் கிளத்தவழியின்றி மகளையுடன் அழைத்துக் கொண்டு இல்லம் சென்றடைந்தான்.

திருஞானசம்பந்தர் திருமயிலையைவிட்டு நீங்கிப்பலதலங்களையும் தரிசித்துக்கொண்டு தில்லைவந்தடைந்தார். ஆங்கு நடராஜப்பெருமானை வணங்கிச் சிலநாள் வசித்திருந்தனர். இச்செய்தி கேட்டுச் சிவபாதஹிருதயர் தம் மகனாரைப் பார்க்கவேண்டி யாங்குவந்தடைந்தார். பிள்ளையாரைச் சீகாழிக்கெழுந்தருள வேண்டுமெனத் தந்தையார் கேட்டுக்கொள்ள அதன்படி அவரும் அங்கு வந்தடைந்தார். பிள்ளையாருடைய பருவத்தைப் பெற்றோர்கள் நோக்கி அவருக்கு மணம் முடித்துவைக்க வேண்டுமென வெண்ணித் தங்கள் கருத்தை அவருக்குத் தெரிவித்தார்கள். பிள்ளையார் கேட்டு முதலின் மறுத்தனர். பிறகு தந்தையார் வேண்டிய ஞாயங்களைக்கூற அவர் இசைந்தனர். பிறகு சிவபாத ஹிருதயர், நம்பாண்டார் நம்பியாரின் புதல்வி அழகு, குணமுதலியவற்றில் மேம்பட்டவளா யிருக்கிறாளெனக் கேள்வியுற்றுச் சில முதியோர்களை உடன் அழைத்துக்கொண்டு நல்லூர் சென்றடைந்தார். நம்பாண்டார் நம்பியார் இவர்கள் வரவைக் கண்டு பேரானந்தமடைந்து வேண்டிய உபசரணைகள் செய்து அவர்களை "வந்தவிசேஷம்யாது?'' எனவினவினர். அவர்கள் "ஐய! நும் மகளை இச்சிவபாத ஹிருதயரின் திருக்குமாரராகிய ஞானசம்பந்தருக்கு மணம் செய்விப்பதில் ஏதுந்தடையுண்டோ?'' என்று கேட்டார்கள். நம்பாண்டார் நம்பியார் "நன்று நன்று இச்சம்பந்தத்தைப் போல எமக்குக்கிடைக்குமோ? என்ன ஆக்ஷேபணை?'' என்று கூறி இசைந்தனர். அதன்படி அவர்கள் முகூர்த்தத்தை நிச்சயித்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

அன்று முதல் நம்பாண்டார் நம்பியாரும் விவாகத்துக்குவேண்டுவன செய்யத் தொடங்கினர். பலவிடங்களுக்கும் விவாகவோலையனுப்பினர். காவணங்கள் அமைக்கப்பட்டன. வீதிகளை அலங்கரித்தார்கள். நம்பியார் தம்முடைக் கிருகத்தைப் புதுக்கி அணிபெறச்செய்து அஷ்டமங்கலங்களும் வைத்துக்கொண்டு மருமகனார் வரவை எதிர்பார்த்திருந்தனர். சகலரும் திருமணங்காண வந்தீண்டினர். வாத்தியங்கள் வாரிதிபோல் ஒலித்தன. பிள்ளையார் முதல் நாளே காப்பணிந்துகொண்டு சகல பரிவாரங்களுடன் நல்லூர் வந்தடைந்தார்.

திருஞான சம்பந்தர் தம்மைச் சேர்ந்தவர்களுடன் தமக்கென்று அமைக்கப்பெற்றிருந்த ஓர் அழகிய மடத்தில் தங்கினர். ஆங்கு அவருக்குப் பிராமணர்கள் மங்கள ஸ்நானம் செய்வித்து ஆடையணிகளால் அலங்காரம் செய்தார்கள். பிள்ளையார் சிவபெருமானை மனத்தில் தியானித்து முத்துச்சிவிகையிலேறிக்கொண்டு மணப்பந்தர்வந்தடுத்தார். வாயிலில் வந்து முத்துச்சிவிகை விட்டிறங்கினர். மனைவியார் பால்நீரைச்செம்பாலே வார்க்க நம்பாண்டார் ஸ்வாமிகள் திருவடிகளை விளக்கி அந்நீரை முடியில் தெளித்துக் கொண்டார். பிறகு ஞானசம்பந்தப்பெருமானுடைய திருக்கரங்களிலே நம்பாண்டார் நீர் வார்த்துத்தங்கள் பிரவரம் கூறித்தம்மகளைக்காட்டி "இவளையுமக்களித்தேன். மனமகிழ்ந்து ஏற்றருளவேண்டும்" என வேண்டினர். திருஞானசம்பந்தர் பெண்ணின் வலக்கரத்தைப் பிடித்துக்கொண்டு கல்யாண மண்டபத்தையடைந்து இடப்பட்டஆசனத்தில் அமர்ந்தார். வேதியர்கள் ஆசிமொழிந்தார்கள். மங்கையர்கள் மங்கலம் பாடினார்கள். பதினெண்கருவிகளும் ஒலித்தன. நல்ல சுபவேளையில் அம்மையார் கழுத்தில் திருமங்கல்யதாரணம் செய்தனர். அக்கினி வலம்சுழித் தெரிந்தது. அதிற் பொரியிட்டு வலம்வந்தனர். அவ்வக்கினியே சிவபெருமான் ஸ்வரூபமெனத் தியானித்து "கல்லூர்ப்பெருமணம்" என்னும் தேவாரத்தைப் பாடியருளினர். உடனே சிவபெருமான் ஜோதிஸ்வரூபமாய்த் தோன்றி "நீயும், நின் தொண்டர்களும் இம்மணங்காண வந்தாரும், யாவரும் இதனுள் வருக." என ஆணையிட்டனர். திருஞான சம்பந்தர் சேர்ந்தாரை

வரையும் சிவரூபமாக்க நினைந்து பஞ்சாக்கரப்பதிகத்தை ஓதிச்சகல ரையும் அந்த ஜோதியிற்புகும்படி செய்து தாமும் தம்மனைவியுடன் அச்சோதியிற் கலந்தனர். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்து "வாழி வாழி" என வாழ்த்தினார்கள்.

மு. கோவிந்தசாமி அய்யர்.

நீதிபதி யோகியான விநோதக்கதை.

(80-ம பக்கம் தொடர்ச்சி.)

யோகி—சிவ.

நீதி—அவர் அடித்தாரா?

யோகி—சிவ.

நீதி—முதலில் யாரடித்தது?

யோகி—சிவ.

நீதி—இவர்கள் அடித்துக்கொண்டதாக வழக்குவந்துள்ளதே இவர்களில் யார் யாரையடித்தது உமக்கு என்னதெரியும்? உம்மை இருவரும் சாட்சியாக வைத்துள்ளார்கள். உமக்குத் தெரிந்ததைக் கூறும்.

யோகியார்—சிவ சிவ சிவ சிவ.

இவ்விதமாக நீதிபதிகேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும்'சிவசிவ' என்பதே யோகியாருடைய மறுமொழியாக இருந்தது. நீதித்தலத் திலுள்ளார் இவர் சாட்சியாயிற்றே? இவரோ, சிவநாமத்தைத்தவிர வேறு கூறுகின்றாரில்லையே? இவ்வழக்கு எவ்விதம் முடிவெய்தும்? என்று கருதினார்கள். அப்பொழுது ஒரு நியாயவாதி யாவரையும் விலக்கிக்கொண்டு யோகியாரிடம் அணுகி, சுவாமி! இந்த வழக்கு உம்மால் தான் முடியவேண்டும். அவர்கள் அடித்துக்கொள்ளும் பொழுது நீர்தாம் அவ்விடத்திலிருந்தீராம். வேறு ஒருவரும் அவ்

விடத்திலில்லையாம். உமக்குத்தாம் எல்லா விஷயங்களும் தெரியுமாம். நீர் கிருபைசெய்து உமக்குத்தெரிந்ததை எவ்விதத்திலாவது எங்களுக்கு விளங்கும்படி கூறியருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்.

பார்த்தார் யோகியார். நமக்கு ஏன் இந்த வம்பு. நாம் ஏதாவது கூறினால் தான் இவ்விடத்திலிருந்து நம்மைப்போக விடுவிவார்கள். நாம் நமது சிவநாமத்தாலேயே நடந்ததை இவர்களுக்கு விளக்கிவிடுவோம் என்று கருதி நீதிபதி முதலிய யாவரையும் பார்த்து, கையை அவ்வழக்காளிகளுக்கு நேரில் காட்டிக்கொண்டு,

இச்சிவம் அச்சிவத்தைச் சிவ
அச்சிவம் இச்சிவத்தைச் சிவசிவ
இச்சிவம் அச்சிவத்தைச் சிவசிவ சிவ
அச்சிவம் இச்சிவத்தைச் சிவசிவ சிவசிவ
இச்சிவம் அச்சிவம் அச்சிவம் இச்சிவம்
சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ, என்றுகூறி

முடிவில் 'நமப்பார்வதீபதையே' என்று உச்சரித்தார். யாவரும் "ஹரஹரமஹாதேவ" என்று எதிரொலிசெய்தார்கள். பின்னர் அவர் நீதிஸ்தலத்தைவிட்டுத் தம்மிடம் அடைந்தார். நீதிஸ்தலத்திலுள்ளார் அவர்கூறியதிலிருந்து நடந்த வரலாற்றை ஒருவாறு ஊகித்தறிந்து அவ்விருவருமே குற்றவாளியென்றுகண்டு கொண்டனர்.

பின்னர் நீதிபதி, யோகியாரைக்கண்டமையாலும் அவர் சிவநாமத்தால், மேன்மையடைந்திருப்பதை அறிந்தமையாலும், தாமும் ஒழிவடைந்திருக்கவேண்டும் என்றுகருதி, எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு யோகியாரையடைந்து உபதேசம்பெற்று யோகியானார்.

ரா. காமேசுரபாகவதர்.
சிந்தாமணி.

ஏகாந்தம்.

ஆங்கில மொழிபெயர்ப்பு.

முந்தையோர்தனக்குவைத்தமுதல்கொண்டுமூதூர்தன்னிற்
சிந்தையிற்றிருப்தியாய்த்தன்றேசக்காற்றுண்டுவாழ்ந்து
விந்தையின்மிக்கநல்லமேன்மையேசேரவெண்ணும்
பந்தனேவுலகிலென்றும்பரிவுளானந்தனம்மா. (1)

ஆனிரைபாலளிக்கஅவனிலஞ்சோறளிக்க
மானினமந்தையாடுமானமாருடையளிக்க
வானுறவளர்ந்துதாவுமாங்கடாணிழலுந்தீயும்
தேனெனவளிக்குங்கோடைதிகழ்வுறுமாரிக்கலாம். (2)

ஒருவருமறியாவண்ணமோங்குநல்லாசிபெற்று
வருடமும்மணியுநாளும்வளர்வினாற்சென்றகாலை
திருவுறுதேகாரோக்யத்திருப்தியுங்கொண்டுமிக்க
மருவுறுமலரேபோலமனமகிழ்ந்திருப்போனானால். (3)

கடவுளைத்யானம்வைத்துக்கல்வியைப்பயின்றுமிக்க
அடலுறுவலிமைபெற்றிங்கையனைவாழ்த்தியேத்திப்
படரிருட்காலந்தன்னிற்படுக்கையிலயர்ந்துதூங்கித்
திடகுணம்நெஞ்சத்தார்ந்துதீவிரமாயிருந்து. (4)

எமன்பதிவிருந்தையுண்ணவேகியகாலையிற்றான்
சமதரைதன்னிற்றன்னைச்சார்ந்தவர்வருந்திடாமல்
விமரிசையின்றியேகவிடுவதேசிலாக்யமாகும்
அமர்தருங்கல்லறையுள்ளங்கொருசிலையும்வேண்டாம். (5)

மாணவன்.

விடுகதை வினா.

அக்கரங்கள்நான்கினால்ஆனதோர்பெயராகும்அதுவேவாளி
தக்கமுதலிரண்டின்றேல்முகிலாமுற்பாதியறச்சாருங்குற்றம்
மிக்கமுதலெழுத்தெடுத்தாற்றத்தையாம்முதலெழுத்தேமிளிர்கோவாகும்
இக்கனையமொழிநயத்திற்றமிழரசே! யிதற்குவிடையியம்புவாயே.

மாணவன்.

சொல்வன்மை.

இப்பூவுலகின்கண் காணப்பட்ட மக்களனைவரும் வேண்டற்பாலனபல. அவற்றுள்முக்கியமாய் வேண்டற்பாலது சொல்வன்மை. சொல்வன்மையாவது பேசும்போதும் எழுதும்போதும் பொருள் மிக்குடையதாயும் பிறரால் வெல்லமுடியாததாயுமுள்ள சொற்களையே உபயோகித்தலாம். இச்சொல்வன்மையில்லாதான் கற்றுணர் புலமையிற்றலைமையோரால் மதிப்பெய்தான். இச்சொல்வன்மை அமைச்சர்க்கே இன்றியமையாததாகக் கூறப்பட்டதெனினும், ஏனையோருக்கும் வேண்டுமென்பது குறிப்பு. இத்தகைய சொல்வன்மையைப் பெறுதல் யாவருக்குமியலாது. இதனாற்றான் "வார்த்தை பதினாயிரத்தொருவர்" எனக்கூறியிருக்கின்றனர். "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாஞ் சொல்" எனுங்குறளை ஆராய்வோம்: தான்கூறும் விடயத்தினைக் கேட்டுக் கொண்டிருந்தாரை வசப்படுத்துந் தன்மைவாய்ந்ததாயும், பகைவரையுந் தான்கூறும் விடயத்தால் தன்னிடத்து வேட்கையுறும்படியாகவும் சொல்லுவதே சொல் என்றார். அன்றியும் சொல்வன்மையுடையார் பிறருக்கு விடயங்களை யெடுத்துக் கூறும்பொழுது கேட்போரது மனக்கருத்தினளவைத் தெரிந்தே உரைத்தல் வேண்டும். இதனை,

"கேட்பாரை நாடிக் கிளத்தப் படும்பொருட்கண்
வேட்கை யறிந்துரைப்பர் வித்தகர்."

என்னும் செய்யுளானறிக.

நிற்க, ஒருவன் பேசுவதில் நன்மொழி புணர்த்தியும், நவின்றோர்க்கு இனிமைதருவதான ஓசையூட்டியும், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன்றருதல் முதலியன அமைந்தனவாயுமுள்ள சொற்களையே பேசல் வேண்டும். கற்றுணராமாக்கள் வீண் டாம்பீகமாக, காலத்தைப் போக்குவதற்குப் பொருளில்லாப் புன்மொழிகளையே பேசித் தன்னைச் சொலல்வல்லானெனக் கருதுகின்றனர். அவர் அவ்வாறு கருதுதல் அவர் மதிக்குறைவைக் காட்டுமேயன்றி அறிவுடைமையைக் காட்டாது. சிலர் இலக்கணப் பயிற்சியின்றி

இரண்டொரு இலக்கிய நூல்களைப் பார்த்தமாத்திரத்திலே முழுதுங் கற்றுவிட்டோம். நம்மை வெல்வாரிலரென்று கருதி உரத்தகுரலோடு கைகால்களை அசைத்துப் பேசுதலும், இலக்கண இலக்கியப்பயிற்சி உடையார் அவ்வாறு பேசாமலிருப்பதும், அறிஞர் உற்றுநோக்குவாராஞல் குறைகுடங் கூத்தாடுமென்ற பழமொழிப்படி "கல்லாதகுறையால் ஏதோ பிதற்றுகிறுன்" என்று கருதுவாரேயல்லாமல் "இவன் கற்றிருந்தும் அவனைப்போல் கைகால்களையசைத்து உரத்தகுரலோடு பேசுகிறுனில்லை"யென்று கருதார். கற்றுணர்ந்தவர் முற்கூறியபடி பேசுந்திறமை வாய்ந்திருப்பாராயின் அஃது பொன்மலர் நாற்றமுடைத்தாகும்.

அவ்வாறு மேற்சொல்லிய நயங்களோடு பேசுவதிலும் கேட்போர் "இஃதென்ன துன்பமாயிருக்கிறது. எப்பொழுது நிறுத்துவாஞே" என்று கருதாதபடித்தாகச் சுருங்கச்சொல்லல், பயனின்றி நிற்கும் சொற்களில்லாமை, விழுப்பயன்றருதல் முதலியவற்ரேடு கூடியதாயும், பருந்தொடு தொடர்ந்த நிழலினைப்போல சொல்லொடு தொடர்ந்த நிறைந்த பொருளுடையதாயுமுள்ள சொற்களையேபேசுவதிலும் எழுதுவதிலும் உபயோகித்தல் வேண்டும். அவ்வாறு உபயோகிப்பதிலும் இலக்கண வழுவின்றித் தொடுக்கவேண்டும். இம்முறைதெரியாதார் சிலர்வலி, மிகவேண்டியவிடத்தி லியல்பாயும் இயல்பாகவேண்டியவிடத்து வலி, மெலிகளை மிகுத்தும் எழுதியும் பேசியும் வருகிறுர்கள். அவ்வாறு பேசுவதை அறிவுடையான் கேட்கின் கற்சேர்ந்தட்ட அடிசிலை அயின்றுனுறும் துன்பத்தினை அடைவான். தன் வன்மையைக் காட்டுவான் கருதி அதிகமாகப்பேசுதலும் எழுதுதலுமாகா. ஏனெனில், கேட்போரும் படிப்போரும் வேட்கையுடன் அதனிடத்து மனஞ்செலுத்தா ராகையால் எழுதுவதற்கும், பேசுவதற்கும் முன்னுராய்ந்து இலக்கண வழுவின்றிச் செஞ்சொற்களையே எடுத்துக்கையாள வேண்டுமென்பதூஉம், படிப்போர்க்கு இன்பந்தருவதாயும் இன்னேசை யுடையதாயுமுள்ள சொற்களையே உபயோகித்தல் வேண்டுவென்பதூஉங் கூறப்பட்டன.

க. பழநிக்குமரன்.

தமிழ்த்தொண்டன், மதுரை.

நாவடக்கம்.

உலகிற்காணப்பட்ட எல்லாப்பிறப்புக்களிலும் மானிடப் பிறப்பே மேலானது. இதனைப் பெற்றோர் அநுசரிக்க வேண்டிய கடமைகள் பல. அவற்றுள் நாவடக்கம் யாவருக்கும் இன்றியமை யாத தொன்றும். நாவடக்கமாவது-இடம், காலம், வலி இவைகளை யறியாது பேசும் நாவை அங்ஙனம் பேசாமல் அடக்குதலாம். நாவ டக்கமின்றிக் கெட்டோர் பலராவர். அவருள் ஒருவாது சரித்தி ரத்தை, ஈண்டுச்சுருக்கிக்கூறி மேற்செல்வாம். திரிபுரமெரித்த விரி சடைக்கடவுளால் தருமியினிமித்தம் அருளிச்செய்யப்பட்ட "கொங்கு தேர் வாழ்க்கை" என்ற பாடலை அத்தருமி வாங்கிச்சென்று, சங்கப் புலவரிடங்காட்ட, அப்புலவருள் தலைமை பூண்ட நக்கீரரென்பார் 'இச்செய்யுள் இல்லது கூறலென்னும் இலக்கண வழுவுடைமையின் இதனை யாம் சம்மதியே' மென, இதுகேட்ட அத்தருமி மனக்கவலை கொண்டு சிவபெருமானுக்கறிவிக்க, அப்பெருமான் புலவர் வேடந் தாங்கி நக்கீரரோடுவாதுசெய்துஇச்செய்யுள் 'இல்லது கூறலென்னும் இலக்கணவழுவுடைத் தன்' றென நாட்டினர். நாட்டியும், நக்கீரர் பிடி வாதமுற்றவராய் 'இது குற்றமேயாகு'மென்றனர். பின்னர் சிவபெரு மான் தன் சொரூபத்தைக் காட்டவேண்டுமெனக் கருதித் தனது நெற்றிக்கண்ணையும், விரிசடையையுங்காட்டினர். அவற்றைக்கண்ட நக்கீரர் தண்டமிழ்கண்ட என்னை சடைகொண்டு வெருட்டல் வேண்டா என்று நாவடக்கஞ் சிறிதுமின்றிக்கூறினர். பின்னர் அப் பிரானுல் குட்டநோயடைந்து வருந்தினர். இது கருதியே தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனரும்,

> "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

தம்மால் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும் நாவொன்றனையுங் காக்கவேண்டும், அதனைக்காவாராயின் சொற்குற் றத்தின்கட்பட்டுத் தாமே துன்புறுவரென்று கூறினர்.

ஈசுவரன் மானிடர்களி னியல்பைத்தெரிந்தே நாவைக்காத்தற் காரணப்பற்களையும்,இதழ்களையும் கொடுத்திருக்கின்றனர். நாம் யாவ

ரோடு பேசினும் இதயத்தினுதிக்கும் விஷயத்தை அறிவாகிய ஆத்தினுலாாவிச் செவ்வைப்படுத்திப் பேசல்வேண்டும். அவ்வாறு பேசுபவனை வெல்வாரிவ்வுலகத்திலொருவருமிலர். சிலர் இவற்றை ஆராயாது நெஞ்சுக்குத் தோன்றியதெல்லாம் பேசித்தன்னைச் சொலல்வல்லானென்று கருதுகின்றனர். அவ்வாறு கருதுதல் கிணற்றகத்துத் தேரை தன்னிருப்பிடமே கருங்கடலென்று கருதியதோடொக்குமேயன்றிவேறல்ல.

நிற்க, குற்றமற்றனவாகிய சிலவாய வார்த்தைகளைச் சொல்ல அறியாதவர் மனந்தோன்றியாங்கு வாய்வந்தபடி யெல்லாம் பிதற்றுபவர்களை இகழ்வார்.

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்று தவர்"

எனத்திருவாய் மலர்ந்தருளினர்.

இதனுல், நாவடக்கமின்மையால் வருங்கேடு இன்னதென்பதூஉம், அறிவுடை மக்கள் நாவடக்கமின்மையை விரும்பா ரென்பதூஉம், நாவடக்கமுடையோராய் ஆராய்ந்து பேசுபவர்களை உலகில் வெல்வா ரொருவருமிலரென்பதூஉம், பயன்படுவனவற்றைச் "சுருங்கச்சொல்லல்" என்னும் அழகுபயப்பக் கூறவேண்டுமென்பதூஉம் சொல்லப்பட்டன.

N. கிருஷ்ணஸாமி

காமந்தகீய நீதிசாரம்.

(75ம் பக்கத் தொடர்ச்சி.)

இரண்டாவது சருக்கம்.

மூன்றாவது பிரகாணம்.

கல்வியின் வகைகள்.

1. அரசன் முதலில் தன்னை அடக்கிக்கொண்டு ஆன்வீக்ஷகி, திரயி, வார்த்தா, தண்டநீதி ஆகிய இவற்றைப்பற்றி அவற்றை அறிந்தவர்களுடனும் அவற்றைக் கொண்டுசெலுத்தினவர்களுடனும் ஆராயவேண்டும்.

2. ஆன்வீக்ஷகி, திரயி, வார்த்தா, நிலைபெற்ற தண்டநீதி ஆகிய நான்கும் உலகத்தின் நன்மைக்குக்காரணமாயிருக்கின்றன.

3. மனுவும் அவரைச்சேர்ந்தவர்களும் திரயி, வார்த்தை, தண்டநீதி ஆகிய இந்த மூன்றுவகைகளையே ஒப்புக்கொள்கின்றனர். அவர்கள் ஆன்வீக்ஷகியை திரயி என்பதனில் அடங்கியிருக்கின்றதாகக் கூறுகின்றனர்.

4. தேவகுருவான பிரஹஸ்பதியின் கொள்கையைத்தழுவினவர்கள், இவ்வுலகம் பொருளையே முதன்மையாகக் கொண்டிருத்தலால் வார்த்தையும் தண்டநீதியுமாகிய இவ்விரண்டு வித்தைகளையுமே வித்தைகள் என்று தீர்மானித்திருக்கின்றனர்.

5. தண்டநீதியொழிந்த மற்றவைகள் எல்லாம் தண்டநீதியிலிருந்து உண்டாகின்றன ஆதலால் இத்தண்டநீதி ஒன்றுமே வித்தையாகும் என்று சுக்கிராச்சாரியரின் வழியினர்கள் உறுதியாகக்கூறுகின்றார்கள்.

6. வேறுவேறான முடிவுகளைக்கருதி உலகம் மேலேறிய நான்கு வித்தைகளிலும் நிலைபெற்றிருப்பதால் அவை நான்குமே வித்தைகள் என்று நமது நல்ல ஆசிரியரான் கௌடில்யருடைய கருத்து.

7. ஆன்வீக்ஷகி என்பது உலகத்துப்பொருள்களின் உண்மையுருவத்தைத் தெரிவிப்பதாம். திரயி என்பது தர்மம் அதர்மம் இவைகளைபற்றித் தெரிவிப்பதாம். வார்த்தா என்பது செல்வத்தை அடைவது இழப்பது முதலியவற்றைப் புலப்படுத்துவதாம். தண்டநீதி என்பது நியாயம் அபநியாயம் இவற்றைக்காண்பிப்பதாம்.

8. ஆன்வீக்ஷகி முதலான மூன்றும் சிறந்த வித்தைகள் என்று சொல்லுகிறார்கள். அப்படி அவைகள் சிறந்தவைளாக விளங்குவது தண்டநீதியிருத்தலாலேயாம்.

9. அரசன் தண்டநீதியை அறிந்து நன்றாகச் செலுத்தினால் அறிவுடையவர்கள் மற்ற வித்தைகளை நன்றாகப்பயில்வார்கள்.

10. வருணம், ஆச்சிரமம் ஆகியவைகள் மேலேகூறிய நால்வகை வித்தைகளிலும் நிலைபெற்றிருக்கின்றன. அரசன் அவ்வித்தைகளைக் காப்பாற்றுவதால் வருண ஆச்சிரமங்களை அனுசரிப்பவர்களைக்

காப்பாற்றினவனாக ஆகிறான். ஆதலால் அவன் அந்தத் தர்மங்களில் ஆறிலொரு பாகத்தைக் கடமையாகப் பெறுகின்றான்.

11. ஆன்வீக்ஷகி என்பது சுகம், துக்கம் முதலியவற்றைத் தெரிவிப்பதால் அது ஆத்மவித்தை என்று சொல்லப்படும். அதனால் பொருள்களின் உண்மைத்தன்மையை அறிபவனுக்கு இன்பமும் துன்பமும் கிடையா.

12. இருக்கு யஜுஸ் சாமம் ஆகிய இம்மூன்று வேதங்களும் திரயி என்று கூறப்படும். விதிப்படி மூன்று வேதங்களிலும் கூறிய வண்ணம் நடப்பவன் இம்மை மறுமை இன்பங்களை அடைகின்றான்.

13. ஒருசார், அங்கங்கள், நான்கு வேதங்கள், மீமாம்சை, நியாயத்தின் வகைகள், தர்மசாஸ்திரங்கள், புராணங்கள் ஆகிய இவைகள் திரயி என்று கூறப்படுகின்றன.

14. பசுக்களைக் காப்பாற்றுதல் விவசாயம்செய்தல் வியாபாரம் ஆகிய இவைகள்,வார்த்தா என்று கூறப்படும். இவைகள் தாம் பிழைப்பிற்குக் காரணமாகவாகும். வார்த்தாவால் பிழைக்கின்றவன், தான் பிழைப்பதற்கு வேறு தொழில் இல்லை என்று அஞ்சவேண்டுவதில்லை.

15. தண்டம் என்பது அடக்குதல் என்று பொருள்படும். அத்தொழிலைச் செய்தலால் அரசனும் தண்டன் என்று அழைக்கப்படுகிறான். நடத்துகின்றதனால் நீதி என்றும் அது அரசனால் செலுத்தப்படுவதால் தண்டநீதியென்றும் கூறப்படுகிறது.

16. அரசன் தண்டநீதியினால் தன்னைக் காப்பாற்றிக்கொண்டு மற்ற வித்தைகளை வளர்த்தல்வேண்டும். வித்தைகள் உலகத்திற்கு நன்மையைச் செய்பவைகள்; ஆதலால் அரசன் அவற்றைக் காப்பவனாக இருக்கவேண்டும்.

17. மிக்க அறிவுள்ள அரசன் முன்கூறிய வித்தைகளால் நன்றாக அறம் பொருள் இன்பம் வீடு ஆகியவற்றை அறியவேண்டும். 'வித்' என்பதற்கு அறிதல் என்பது பொருளாதலால் இவற்றை வித்தைகள் என்று கூறுகின்றனர்.

மூன்றாவது பிரகரணம் முற்றிற்று.

நான்காவது பிரகரணம்.

வருணாச்சிரமங்களை வரையறுப்பது.

18. வேள்விசெய்தல், ஓதல், ஈதல், ஆகிய இம் மூன்றையும் முறைப்படிசெய்வது பிராமண க்ஷத்திரிய வைசியர்களாகிய மூன்று ஜாதியார்களுக்கும் தொன்று தொட்டுவரும் பொதுவான தொழில்கள் என்று சொல்லப்படுகின்றன.

19. வேள்விசெய்வித்தல் ஓதுவித்தல் தகுதியானவர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய மூன்றும் பிராமணர்களுக்குச் சிறந்த தர்மங்கள் என்று ரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கின்றன.

20. ஆயுதமெடுத்துப் பிழைத்தலும் குடிகளைக் காப்பாற்றுதலும் அரசனுடைய சிறந்த தொழில்களாம்; பசுக்களைப் பரிபாலித்தலும் உழவும் வியாபாரமும் வைசியனுடைய சிறந்த தொழில்களாகக் கருதப்படுகின்றன.

21. மேற்கூறிய இருபிறப்பாளர்களுக்கு முறைப்படி பணிவிடை செய்தலே சூத்திரனுடைய மேலான தொழிலாம். அன்றியும், சித்திரம் எழுதல், கொல்லவேலை, தச்சுவேலை முதலிய தொழில்களும் பாடல், ஆடல் முதலியவைகளும் அவனுக்கு உற்றதொழில்களாம்.

22-23. குருவின் வீட்டில் வசிப்பதும் புண்ய அக்னியைப் பூஜை செய்வதும் வேதமோதுவதும் விரதங்களை அனுஷ்டிப்பதும் ஒவ்வொருநாளும் மூன்று காலங்களிலும் நீராடுவதும் பிக்ஷை எடுத்துப் பிழைப்பதும் (தன் உயிருள்ளவரை) குரு இல்லாத காலங்களில் குருவினுடைய புத்திரனிடத்திலாவது அல்லது மற்றொரு பிரம்மசாரியுடனாவது வசிப்பதும் பிறகு விருப்பமிருந்தால் வேறு ஆச்சிரமங்களை அடைவதும் ஆகிய இவைகள் பிரம்மசாரியின் தர்மங்களாம்.

24. பிரம்மசாரியானவன் தான் ஓதிமுடியும்வரை மேகலையுடனிருப்பதும் சடையுடனாவது அல்லது குடுமிவைத்துக்கொண்டாவது இருப்பதும் தண்டம் தரித்துக்கொண்டிருப்பதும் தனது குருவை அடுத்திருப்பதும் விருப்பமுளதாயின் வேறு ஆச்சிரமத்தை அடைவதும் செய்யவேண்டும்.

25-26. அக்னிஹோத்திரம் செய்தல், தமக்கு விதித்த தொழில்களால் ஜீவிப்பது, தர்மபத்னியிடத்தில் ருது காலங்களில்

பர்வகாலங்களை நீக்கிவிட்டுச் சேர்வது, தேவபூஜை பிதிர்பூஜை விருந்தோம்பல் முதலியவைகளைச் செய்வது, ஏழைகளுக்கு இரங்குவது, சுருதிஸ்மிருதிகளில் கூறிய பொருள்களை அனுஷ்டிப்பது ஆகிய இவைகள் இல்லறத்தாருடைய தொழில்களாம்.

27-28. சடையை உடையவனுயிருத்தல், அக்னிஹோத்திரம் செய்தல், தரையில் படுத்துக்கொள்ளல், மான்தோலைத்தரித்தல், வனத்தில் வசித்தல், நீர் கிழங்கு காட்டுத்தானியம் பழங்கள் இவைகளை ஆகாரமாகக்கொள்ளுதல், பிறரிடத்தில்ஏற்பதை விட்டுவிடுதல், மூன்று காலங்களிலும் நீராடுதல், விரதங்களை அனுஷ்டித்தல், தேவதைகளைப் பூஜித்தல், விருந்தினர்களை உபசரித்தல் ஆகிய இவைகள் வானப்பிரஸ்தனுடைய தர்மங்களாம்.

29-31. எல்லாக்காரியங்களையும் விட்டுவிடுவது, பிக்ஷைவாங்கி ஜீவிப்பது, மரத்தின் கீழ்வசிப்பது, ஏற்பதை விட்டுவிடுவது, பிறர்க்குக் கெடுதிசெய்யாதிருப்பது, யாவரையும் ஒப்பநாடுவது, பகைநட்புப் பாராட்டாதிருப்பது, சுகதுக்கங்களில் மனவேறுபாடின்றியிருப்பது, புறந்தூய்மை அகந்தூய்மையுடையனுயிருப்பது, மிகுதியாகப் பேசாதிருப்பது; விருதங்களை அனுஷ்டிப்பது, எல்லா இந்திரியங்களையும் அடக்குவது, மனத்தை அடக்குவது, தியானம் பண்ணுவது, சந்தேகமில்லாதிருப்பது ஆகிய இவைகள் துறவிகளுடைய தர்மங்களாம்.

32. பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமை, இனிமையாகப் பேசுவது, அகந்தூய்மை, புறந்தூய்மை, அன்பு, பொறுமைஆகியஇவைகள் எல்லாவருணத்தார்களுக்கும் ஆச்சிரமத்தார்களுக்கும் பொதுவான தர்மங்களாம்.

33. மேலே கூறிய அவரவர்கட்குரிய தர்மங்களை அவரவர்கள் செய்வதால், சுவர்க்கத்தையும் மோக்ஷத்தையும் அடைகின்றனர். அங்ஙனம் செய்யாதுவிடின் இவ்வுலகம் ஜாதிக்கலப்படைந்து நாசத்தையடையும்.

34. அரசன் முறைப்படி மேலேகூறிய தர்மங்கள் எல்லாவற்றையும் கொண்டு செலுத்தவேண்டும். அவ்வரசன் இல்லாது போயின் தர்மங்கள் அழிந்துவிடும். தர்மங்கள் அழிந்தால் உலகம் கேடடையும்.

(தொடரும்.) பத்திராசிரியர்.

அனுபவ ஸங்கீதம்.

(79-ம் பக்கத்தொடர்ச்சி.)

சிவப்பிரஸாதத்திற் காளானேமென்று உடலும் உள்ளமும் பூரித்து மிருந்த நிதானத்தோடு, வீணையில் மந்திராதி தாரார்ந்தங்களாகவும், ஸப்தநாடிகளும் பஞ்சேந்திரியங்களும், த்ருவிதஸ்வரங்களும் ஒன்றுபடச் சுருதிகூட்டி அதற்கு ஸாதகமாய் மந்திர, மத்திய, தார, ஸ்தாயிகள் பொருந்தத் தங்களது இன்னிசையை வீணாநாதத்தோடு பொருத்திச் சுருதிலயங்கள் விலகாமல் தமது கருவிகாணுதிலையொடுக்கி மனத்தை நாதத்தில்லயப்படுத்தி எங்கும்நிறைந்த நாதஸ்வரூபமாகவே தன்மயமாகிப் பரமசிவனது உளம் மகிழுமாறு பரவசமாகக் கானம் செய்தனர். ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்ச்சியின்றி மனோலயத்தோடு கானம்செய்த அவ்விருமுனிவர்களின் நல்லிசையைச்செவிமடுத்த பரமசிவன் அத்தகையஆநந்தமயமானகானம் தனது செவியைவிட்டகலாதிருக்குமாறு, அந்நாக குமாரிருவரையும் தனது செவிக்கணிகளாகிய குண்டலமாக இருக்குமாறு பணித்தனர். “எப்பொழுதும் என் செவியில் நுமது இனிய கானத்தைச் செய்துகொண்டு நோக்காடுசாக்காடின்றி இனிதுவாழ்வீர்” என்றநுக்கிரகித்திருக்கிறுரென்றுல் நாதமானது ஈசுவராதிகட்கும் ஆநந்தாஸ்பதமாயிருப்பது, எம்மாலளவிடற்பாற்றே.

நாதமானது ஆஹதநாத மென்றும், அநாஹதநாத மென்றும் இருவகைப்படும். அநாஹதநாதமானது முனிவர்களான மஹான்களால், இயம, நியம, ஆஸன, ப்ராணாயாம, ப்ரத்யாஹார, தியான, தாரண, ஸமாதி யென்னும் அஷ்டாங்கயோகங்களினாலும், பூரகம், கும்பகம், ரேசகம் ஆதிகளில் தங்கள் பாகத்திற்குக் கிடைக்கும் மூன்றிலொரு பங்குவாஸஸ்தில் நாலங்குலம் நிலைநாட்டி அதில் (21600) இருபத்தோராயிரத் தறுநூறுச்வாஸங்களில் தினமானமாகக்கணக்கெடுத்து மிகுதியாகிறச்வாஸ ஸமூகங்களை மூலாதாராதி ஆறுதாரங்களுக்குப் பகுந்துகொடுத்து, ஆக்ஞாஸ்தானத்தில் ஸ்திரமாய்நின்று ஜனனமரண ரஹிதமாயிருக்கிற புருவத்தியாகிற மேல்தாரத்தின் மூலாதாரத்தினின்று, உச்வாஸ நிச்வாஸரஹிதமான கல்பாந்தமாய்

வாழ்கிற நித்தியஜீவனையடைந்து ஜோதிர்மயமாய் விளங்குகிற அமிருத [illegible]லவிலே ப்ருமமானந்தாமிருதமுண்டு, தன்னையுமறந்து பரவசப்படும்படி ஒலிக்கின்ற அகண்டமானநாதத்தில் ஈடுபட்டுத் தன்மயமாய் தன்மாத்திரமாய் ஆநந்தத்தையடைந்து நாதமயமாய் நிற்றல் என்பதே அனாஹதநாதமாம். அந்த அநாஹதநாதமானது அத்தகைய முனிவர்களால் தியானிக்கப்பட்டு அவரவர்களுடைய மட்டிலேயே ஆநந்தானுபவ ஹேதுவாயிருக்கிறது.

ஆகையால் அநாஹத நாதமானது அனுபவத்தாலறியப்படுதல் என்று கானநிபுணர்கள் கூறுகிறார்கள். ஆஹதநாதமானது ஸகல ஜீவகோடிகளாலும், நன்றாய்க்கேட்டு ஆநந்தமடையவும் இகபாஸவுக்கியங்களைப் பெறவும்பரமஸாதனமாய் விளங்கிக்கொண்டிருக்கிறது. அத்தகைய ஆஹதநாதத்தையே முன்வைத்துக்கானவல்லுநரான பெரியார், பற்பல இசைநூல்களை, இவ்வுலகுய்யுமாறு தந்திருக்கின்றனர். அவ்விசை நூல்களின் நுட்பங்களோ பல. அவற்றுள் சிற்சில பாகங்கள் தெளிந்தும், சிலசிதைந்தும் காணப்படுகின்றன. அவற்றுள் தெளிந்த சில விஷயங்களை வெளியிடுவோம். ஆஹதநாதமென்பது மூன்றுபாகங்களுள்ளன. (இன்னும் வரும்)

L. முத்தையா பாகவதர்,
ஸ்ரீதியாகராஜ ஸங்கீத வித்யாலயம், மதுரை.

விநோதக்கூற்று.

(1) பிரபலவித்வானும் பெருங்கொடைச்சூரிசிலுமான ஓர் பிரபுவைச்சந்தித்த புலவனொருவன் அவரிடம் நீடித்துப்பேசியபின், அன்னார்க் கிலக்கணப் பயிற்சி யிணக்கமின்மைகண்டு "பஞ்ச லக்ஷணம் பார்த்திருக்கிறதோ" என்றனனும். பிரபு "தாதுவருஷத்திய பஞ்ச லக்ஷணத்தை நினைக்கிலென் தாதுமொடுங்குகிறதே" யென்றனராம்.

(2) ஆங்கிலவாணரானே ஸ்காட் (Scot) என்பவரும், அவர் நேயரொருவரும் வேடிக்கையாகப் பலவிஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தபோது, அந்நேயர் தன் வேடிக்கைப்பேச்சில் "ஸ்காட்(Scot)

டுக்கும், ஸாட் (Sot)டுக்கும் நடுவிலுள்ளதுவோ ரெழுத்தே" யென்றனாராம். அதற்கு வாணர் "இல்லை. நடுவிலிருப்பது மேஜையே" யென்று பதிலுரைத்தாராம்.

Scot=வாணர் பெயர். Sot=குடிகாரன்.

---

(3) இயற்கையா யொரற்றைக்கண் குருடரான பாவலரொருவர், தன் நண்பர் பண்டிதராயுள்ளவோர் பாடசாலைக்கேகினர். அச்சமயம் பண்டிதர் இலக்கணம் பயிற்றுவித்துக்கொண்டிருந்தனர். இலக்கணத்திலாற்றலுமார்வமுமுள்ள பாவலர் தன்கல்வியை வெளிப்படுத்துவார்போல், ஓர்பையனை நோக்கி, "நெடிலோடுயிர்த் தொடர்க் குற்றுகரங்களுட்டற வொற்றிரட்டும் வேற்றுமை மிகவே" என்னும் நன்னூற் சூத்திரத்தைச் சொல்லியுதாரணங் கொடுக்ுமாறுத் திரமாய்க் கடாவொன் றெழுப்பினர். மாத்திரைப் பொழுதில் மாணவனும், "குருடு+கண்=குருட்டுக்கண்" எனக்காத்திரமாய் விடை கொடுத்தனன். (இன்னும் வரும்)

"மாணவன்."

வேம்பத்தூர்ச் சங்கத்தார் வரலாறு.

(71-ம் பக்கத்தொடர்ச்சி.)

செவ்வைச்சூடுவார்.

மேலும் சூரியவம்சத்தாசனுன இவர் பகீரதன்கதை யுரைத்த அத்தியாயத்தில் 1 பகீரதன் புதல்வன் 2 சுருதன் சுருதன்புதல்வன் 3 நாபாவரன்புதல்வன் சிந்துத்தீபன் இவன்புதல்வன் யுதாயு இவன் குமாரன் இருதுபர்னன் இந்த ரிதுபர்னன் பகீரதனுக்கு ஆறுவது தலைமுறையிற் பிறந்தவனென்பது நமக்குத் தெரிகின்றது. இந்த இருதுபன்னனே சந்திரவம்சத்தாசனுன நளனோடு நட்புக்கொண்டொருகாலத்தில் நளனுக்குக் கலிகடியும் விஞ்சையைச் சொல்லிக் கொடுத்துப் பின் அவனிடமிருந்து குதிரை மனமறியும் விஞ்சையைக் கற்றுக்கொண்டானென்பதும் விளக்கவுரைத்திருக்கின்ற கவியை மீண்டுக் கவனிக்கத்தக்கதாகும்.

இருக்குநாளினிற்கலிகடிந்திடுவதோர்விஞ்சை
மருக்கமழ்ந்ததார்நளனெனுமன்னனுக்குணர்த்திப்
பொருக்கெனச்செலும்புரவியினுளமறிவிஞ்சை
உரைக்குமன்னவனிசைப்பநன்குணர்ந்தனன்மாதோ.

அதிவீரராமபாண்டியர் தாமியற்றிய நைடதத்தில் கலிநீங்கு படலத்தில் இருதுபன்னமகாராசன் தான்றிமரத்தைக் கண்டவுடன் தன்னுடைய ரதத்தைச் செலுத்துபவனாகிய வாகுவனென்னும் பேர் பூண்ட நளனைத் தேரைநிறுத்தச் சொல்லித் தான் தான்றிமரத்தினுடைய இலையும் காயும் பழமும் மூன்றுகோடியே முப்பத்திரண்டென வெண்ணித் தொகை கூறியதாகவும் அந்தவுரைகேட்டு வாகுவனாகிய நளன் எண்ணிப்பார்த்துச் சரியென மகிழ்ந்தான் என்று இரண்டு செய்யுளால் கூறியிருக்கிறார். செய்யுள் வருமாறு:—

தான்றிமாமரந்தோன்றலுந்தேரினைத்தகைத்துத்
தோன்றுமிம்மரத்திலைகளுந்தொக்கமென்பழனும்
மூன்றுகோடியேமுப்பதிற்றிரண்டெனமொழிய
ஆன்றகேள்வியோனெண்ணியற்றுமெனவியந்தான். (1)

இனையவிஞ்சைமற்றெனக்குநீயளித்தனையென்னிற்
றனைவயப்பரியுளமுணர்விஞ்சையான்சொல்வன்
வனைபொலன்கழன்மணிமுடிமன்னவென்றுரைப்ப
அனையவிஞ்சையைவாகுவற்களித்தனனன்றே. (2)

இவ்வதிவீரராமபாண்டியர் கலிநீங்குவதற்கான வித்தையைச் சொல்லிக்கொடுத்தானென்றுகருதி மரத்தைப் பார்த்தமாத்திரத்தே இலைகளையும் காய்களையும் பழங்களையும் எண்ணாது தொகைகூறும்படியான வித்தையைச் சொல்லிக்கொடுத்தானென்றும் அதன்பிறகு கலிதானே சிற்சில காரணங்களால் நீங்கினவென்றுங் கூறியிருக்கிறார். செவ்வைச்சூடுவாரோ கலிகடியும் வித்தையை (மந்திரத்தை)ச் சொல்லிக்கொடுத்தானென்று கூறியிருக்கிறார். இதனானே சுருதியுக்திகளைக்கொண்டு கவிஞர்பெருமக்களாராய்ந்துணர்ந்து, கொள்ளத்தக்கது எவர் கூற்றென்று தெளிந்துகொள்வீர்களாக.

இன்னமும் இச்செவ்வைச்சூடுவார் பாகவதத்திற் சக்கிரவர்த்தி திருமகனவதாரப் படலத்தில் இராமன் முதலிய நால்வரையும் கோசலை முதலிய மூவரும் பெற்றனரென்றுரைத்திருக்கும் கவிகளின் றிரிபுநயங்களையும்,

கம்பர், இராமாயணத்திற் றிருஅவதாரப் படலத்தில் இராமன் முதலிய நால்வருக்கும் உரைத்திருக்குங் கவிகளின்றிரிபுநயங்களையும் உற்றுணர்வேமாக.

பாகவதம்.

பூசலைவெரீஇயபுலவர்வேண்டலால்
வீசலையுறங்குவோன்விளம்பிராமனென்
றூசலைநிகர்குழையுலவும்வாள்விழிக்
கோசலையளித்திடக்குலவினனரோ. (1)

இராமனுக்குத் திரிபு சொல்லவந்தவர் கோசலைக்கே திரிபு எடுத்துக் கொண்டு இராமனால் தாய்க்கேற்றமதிகரித்து விளங்கவுரைத்திருப்பது காண்க.

இராமாயணம் கம்பர்.

காமலையத்தளர்கைக்கரியெய்த்தே
வாரவணையிற்றுயில்வோயெனவந்நாள்
விராவியளித்தருண்மெய்ப்பொருளுக்கே
இராமனெனப்பெயரீந்தனனன்றே. (2)

கம்பரிராமனென்னும் பெயர்க்கே திரிபுஎடுத்துக் கூறியிருக்கும் சாமர்த்தியம் வியக்கத்தக்கது. தாய்பெயர் கூறவில்லை. இனி இவ்விரு பெரும் புலவரும் பாதனுக்குத் திரிபுகூறியிருப்பது பெரும்பாலும் பொருட் பொருத்தமுடையதாகவிருக்கின்றது நோக்கத்தக்கது.

பாகவதம்.

சாதனையறிவனைத்தருமரூபனை
வாதனையிராகவன்மலர்நற்றுடொழும்
விாதனைவிண்ணவர்விரும்பினேத்துறு
பாதனைக்கேகயன்பாவைபெற்றனள். (3)

இச்செய்யுளில் பாதன் பெயர்க்குத் திரிபுகூறி தாயார் பெயரும் விளக்கியிருக்கிறார்.

இராமாயணம்.

காதலமுற்றெளிர்நெல்லிகடுப்ப
விரதமறைப்பொருண்மெய்ந்நெறிகண்ட
வாதனுதித்திடமற்றையவொளியைப்
பாதனெனப்பெயர்பன்னினனன்றே. (4)

முதல்நூலில் இனி வான்மீகி இராமாயணத்தில் கைகேசியை கடைசிப்பாரியாக சந்தேகப்பட வுரைத்திருக்கவும் கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வாரும் பாகவதத்தில் செவ்வைச்சூடுவாரும் இடை மனைவியேயெனத்தெளிபடக் கூறியிருப்பதும் நோக்கத்தக்கதேயாம். (தொடரும்.)

வேம்பத்தூர். பி. பாஸ்கரய்யர்,
தமிழ்ப்பண்டிதர்.

சம்பகமாலினி.

(76-ம் பக்கத்தொடர்ச்சி.)

காட்சி. இரண்டு.

இடம் கலிங்கதேசத்தரசன் கொலு

பாத்திரங்கள் சாருதத்தன், சல்லியன், ஜயசிம்மன், பட்டபாணன் முதலிய மந்திரிகள் பிரதானிகள்.

சாரு—அமைச்சர்களே! சபையோர்களே! நான் சிலகாலத்துக்கு மூன்வரை இவ்விராஜ்யத்தை என்னுலியன்றமட்டும் நன்றாக ஆண்டுவந்தேன். இப்பொழுது சிலகாலமாக எனது சிறியதகப்பன் மகனாகிய சல்லியனுடைய உதவியால் இதனை அரசநீதியில் கூறிய வண்ணம் மிகவும் நன்றாக ஆளும்வன்மை எனக்கு ஏற்பட்டது.

அதற்காக நீங்கள் அவனிடத்தில் நன்றியறிவுள்ளவர்களாக இருப்பீர்கள் என்று நம்புகின்றேன். எல்லோரும் ஆம்! அரசே! அவ்விதமே.

சல்லி—மன்னவரேறே! தாம் மாண்புடன்கூறும் வார்த்தைகளுக்காக நான் வந்தனமளிக்கின்றேன். எனினும் தாங்கள் கூறிய வண்ணம் அந்தகைய பெருமையைப் பெறுவதற்குச் சிறியேன் எவ்வளவும் தகுதியுடையவனல்லேன். தாம்எனக்குஇடும் வேலைகளைச் செய்யக் கடமைப்பட்டுள்ளேனாதலின் என்கடமையைச் செய்து நிறைவேற்றினேன். அதனால் எனக்குப்பெருமை எப்படியுண்டாகும்.

சாரு—சல்லிய! நீ எப்பொழுதுமே அடக்கமுள்ளவன் என்பதை நானறிவேன். இப்பொழுது நீ அடக்கத்துடன் பேசியது ஓராச்சரியமோ!

சல்—என்னைத் தாழ்மைப்படுத்திப் பேசிக்கொள்வதால் பிறர் புகழ்வார்கள் என்றுகருதிப் பேசவில்லை. உண்மையிலேயே, நான் தங்கள்கீழ்க் குடியாகையால், நாட்டிற்கு நன்மையை நாடுவதில் அரசனைப் போலவே குடிமக்களும் கருத்துடையவர்களாயிருக்க வேண்டும்என்னும் விதிபற்றியே ஏதோ என்னாலியன்றதைத் தங்களுடைய ப்ரபாவத்தால் செய்துமுடித்தேன் என்பதுதவிரவேறில்லை. தாங்கள் அரசாயிருக்கையில் குடிமக்களும் அரசாங்கத்தை நடத்திச்செல்லும் அதிகாரிகளும் கவலுறவேண்டுவதில்லை.

சாரு—ரொம்பசந்தோஷம்:—நான் உங்கள் முன்பு கூறவேண்டுவது ஒன்றுண்டு. நானோ வயோதிகனாகவாகிவிட்டேன். இனிமேல் இப்பெரும் ராஜ்யத்தை வெகுகாலம்சரியாகஆண்டுவர மிகவும்அசக்தனாக விருக்கின்றேன். நான் போனஜென்மத்திற் செய்தவினையின் பயனாலோ எனக்குப் பிறந்தபுத்திரன் புத்தியற்றவனாகவிருக்கின்றான். அவன் சிங்காதனத்தையடைந்து அரசுரிமை நடத்தச் சக்தியற்றவன். தற்காலமாக மிகுந்த புத்திசாதுரியத்துடன்கூடிய ஓர் புத்திரியை ஈசன்எனக்களித்திருக்கின்றான். வயதுமுதிர்ந்த காலத்தில் எனது அன்னையைப்போல் என் சுகத்தைநாடினதைச் சந்தோஷிப்பிக்கிறாள். அவளுக்குத்தக்க ஓர் ராஜகுமாரனை விவாகம் செய்வித்து

இவ்விராஜ்ஜியத்தையும் ஒப்புவிக்கக் கருதியிருக்கின்றேன். அதற்கு ஈசன் திருவருள் புரிவாராக. அதுவரை சிங்காதனத்தில் நானே யமர்ந்து உங்களுதவியைக்கொண்டு ராஜ்யபாரஞ் செலுத்துவதென்றால் என் தேகநிலைமை எவ்வாறு இருக்குமோ என்று தோன்றுகின்றது. ஆகையால் நீங்கள் ஆலோசித்து உங்கள் தீர்மானத்தைத் தெரிவிக்கவேண்டும்.

சல்லி—மந்திரிகளே! நமது மகாராஜா கூறியதை நீங்கள் செவிகொடுத்துக் கேட்டீர்களல்லவா? இத்தருணத்தில் நான் சில விஷயங்களைச் செப்புவதற்கு நீங்கள் அனுமதி கொடுப்பீர்களென்று நான் நம்புகின்றேன். மகாராஜாவின் தேகவலிமை குறைந்துவருகின்றதென்று கூறுவதாலும் அவரது குமாரத்தியைப்பெறும் ராஜகுமாரரே பட்டத்திற்குரியவரென்று அபிப்பிராயம் கொள்வதாலும் அதற்கு நாம் உடன்பட்டு நடக்கவேண்டியதவசியமென எனக்குத் தோன்றுகின்றது. ஆயினும் இராஜகுமாரத்தியை விவாகம் செய்வதற்கு முன் நாம் எதிர்பாராதபடி மகாராஜாவிற்கு ஏதேனும் சம்பவித்தால்.

பட்டபாண—சல்லியராஜனே! அவ்வாறு தாங்கள் உரைக்கலாகாது. மகாராஜா நீடூழிகாலம் வாழ்வாராக.

எல்லோரும்—மகாராஜா நீடூழிகாலம் வாழ்வாராக.

சாருதத்—மந்திரிகளே! அமருங்கள், 'நெருப்பென்றால் வாய் வெந்துபோகாது' என்ற சாதாரணவாக்கியத்தை நீங்களனைவரும் கேட்டிருப்பீர்கள். சல்லியா! உன் புத்திகூர்மைக்கு மெச்சினேன். இதைப்பற்றி நான் நினைக்கவில்லை, அதை எனக்கு ஞாபகமூட்டியதற்கு உனக்கு நான் வந்தனமளிக்கின்றேன். சபையோர்களே! என்பால் பிரியம்பாராட்டும் பிரஜைகளே! இன்று நான் கூறுவதின்படி நீங்கள் நடப்பீர்கள் என்றதைரியங்கொண்டு கூறுகின்றேன். சல்லியனுரைத்தபடி எனதுபுத்திரி ஷண்பகமாலினியின் விவாகம் நடக்குமுன் நான் இறப்பேனுயின் சல்லியனே பிரதிநிதியாகவிருந்துவரவேண்டும். அவனிடத்தில் எனக்குப் பூரணநம்பிக்கையுண்டு. அவன் ஒருக்காலும் என் குழந்தையின் சுகத்தைக் கெடுக்கத் துணியான். சல்லியா! உன்பேரில் நான் பாராட்டிவந்த பக்ஷத்தையுமபி

மானத்தையும்விணுக்காதே. சண்பகமாலினியை நீதான் காப்பாற்ற வேண்டும். அவளுக்கு மனமொப்பிய ஓர் கணவனை மணம்செய்வித்து அவர்களுக்கு ராஜ்ஜியபட்டாபிஷேகம் செய்துவைப்பது உனதுகடமையாகும். அதுவரை யாதொரு துரோகசித்தமின்றி ஓர் பிரதிநிதியாகவிருந்து ஆண்டுவா நான் உத்தரவளிக்கின்றேன்.

எல்லோ—உங்கள் சொற்படிநடக்க எல்லோரும் சம்மதிக்கின்றோம்.

சல்லி—மகாராஜா! எனக்கு நீங்கள் கடுமையான வேலையையிட்டபோதிலும் அதைநான் வகிக்கச் சம்மதிக்கின்றேன். என்மீது நீங்கள்கொண்ட அன்பை என்றும் மறவேன்.

சேவகன் வந்து மந்திரியிடம் தனிமையாகக் கூறுகின்றான்.

சுமந்—மகாராஜா! கர்நாடக தேசத்திலிருந்து ஓர் மல்லன் வந்திருக்கின்றான். அவன் ராஜ சன்னிதானத்தை நாடுகின்றான்.

சாரு—அவனைக் கூட்டிவாச் சொல்லும்.

சண்டப்பிரசண்டன் உடனே வருகின்றான்.

சண்ட—மகாராஜா! நமஸ்கரிக்கின்றேன். நான் கர்நாடக தேசத்து ராஜமல்லன். என்பெயர் அதிபிரபல்லிய ஹனுமத்கடாட்ச அதளவிதள சுதல ரசாதள தலாதள மகாதள பாதாள சண்டமாருத அண்டபகிரண்ட சண்டப்பிரசண்ட ராவுஜி. நான் என்நாட்டைவிட்டு திக்குவிஜயம் செய்யவெண்ணிப் புறப்பட்டு எல்லாத் திக்குகளிலும் சென்று ஆங்காங்குள்ள ராஜ்ஜியங்களில் வசிக்கும் அரண்மனை மல்லவீரர்களை முஷ்டியுத்தத்தில் வென்றுகொன்று வீரமாலைகளையும் வீரப்பிரதாபக் கொடிகளையும் அளவற்ற கப்பங்களையும் கொண்டுவந்திருக்கின்றேன். இன்று இந்நாட்டையடைந்தேன்.

(தொடரும்.)

K. இராமநாதையர்,
வக்கீல், சாத்தூர்.

வைத்தியக் குறிப்பு.

———:———

(62-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸ்நானம் செய்வதில் கவனிக்கவேண்டிய விஷயங்கள் சிலவுள அவை:—எப்பொழுதும் குளிர்ந்த ஜலத்தில் தான் ஸ்நானம் செய்ய வேண்டுமே யொழிய வெந்நீரில் ஸ்நானம் செய்வது கூடாது. சில அஸௌகரியங்களை முன்னிட்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டியதாய் ஏற்பட்ட காலத்திலும் இளஞ்சூடான வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். கொதிக்கிற வெந்நீரை எக்காரணத்தைக்கொண்டும் சிரஸில் விட்டுக்கொள்ளக்கூடாது. அப்படிச்செய்வதினால் மூளைக்கும் கண்களுக்கும் கெடுதலுண்டாகக்கூடும்.

ஸ்நானம் செய்யும்போது சரீரத்தை நன்றாகத்தேய்த்து அழுக்குப் போக ஸ்நானம் செய்யவேண்டும். அதற்காக உஷ்ணமான சோப்புக்களை உபயோகிப்பது மிகவும் தவறு. அவைகளால் சரீரத்திற்கு அநேக கெடுதிகள் உண்டாகின்றன. சோப்புக்களுக்குப் பதிலாக நிச்சயமாய் அநேக நற்குணங்களையுடையனவான அடியில் வரைந்துள்ள சாக்குக்களைக்கொண்டு வாசனைப்பொடிசெய்து தினந்தோறும் ஸ்நானம்செய்யும்காலத்தில் அதை உடம்பில் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்துவந்தால் தோலைப்பற்றிய வியாதிகள் முழுவதும் நிவாரணமாவதுடன் தோலுக்குமிருதுவும் காந்தியும் சரீர ஆரோக்கியமும் உண்டாகும்.

வாசனைப்பொடியின் கூட்டுச்சரக்குகள்.

1.	பூலாங்கிழங்கு	1 பலம்
2.	செம்பகமொட்டு	ஷை
3.	ரோஜாமொட்டு	ஷை
4.	கல்பாசி	ஷை
5.	பூஞ்சாந்துப்பட்டை	ஷை
6.	கிளியூரம்பட்டை	ஷை
7.	சுமித்திராப்பச்சை	ஷை
8.	சன்னலவங்கப்பட்டை	ஷை

9.	லவங்கப்பத்திரி	ஷை
10.	மகிழம்பூ	ஷை
11.	கோரைக்கிழங்கு	ஷை
12.	வாசனைக்கோஷ்டம்	ஷை
13.	கஸ்தூரிமஞ்சள்	ஷை

இந்தப் பதின்மூன்று சாமான்களையும் மேற்கண்ட எடைப்படி வாங்கி வெய்யிலில் நன்குகாயவைத்து உரலில்சேர்த்து இடித்து வடிகட்டி வைத்துக்கொண்டு மேற்கண்டபடி ஸ்நானம் செய்யும் போது உபயோகிப்பதில் அளவிறந்த நன்மைகளுண்டாகுமென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. சாஸ்திரமுறைப்படி தயாரித்த சிறந்த வாசனைப்பொடி நம்மிடமிருக்கிறதை விலைகொடுத்து வாங்கிக் கொள்ளலாம். சோப்பைப் பூசிக்கொள்ளுவதினால் சரீரவறட்சியும் கண் எரிவும் உஷ்ணதிக்கமும் உண்டாவதுடன் அதிகமான வீண் பணச்செலவும் தான் ஏற்படுகிறது.

அதிலும் நம்மிந்திய சகோதரிகள் தொன்று தொட்டு பழக்க வழக்கத்திலிருந்து வந்ததான மஞ்சள் பூசிக்கொள்ளுவதைப்பெரும்பாலும் நிறுத்திவிட்டு நவநாகரீகமென்று நினைத்துச் சோப்பைப் பூசிக்கொள்ளுவது மிகவும் அருவருக்கத்தக்கதாயிருக்கின்றது. மஞ்சள் பூசிக்கொள்ளுவதால் விஷசம்பந்தமான தோஷப்பற்றிய அநேக வியாதிகள் நிவிர்த்தியாகிறதோடு தேக ஆரோக்கியமும் சரீரத்திற்கு அழகிய காந்தியும் மலர்மாதின் மகிழ்நோக்கும் மாறாமல் உண்டாகுமென்பதை நம் சகோதரிகளனைவரும் ஞாபகத்திலிருத்தி மஞ்சளையே உபயோகிக்கவேண்டும். உடையை அழுக்கின்றித் தினமும் துவைத்துக் கட்டிக்கொள்ளவேண்டுமே தவிர வண்ணானிடமிருந்து வாங்கியபடி கட்டிக்கொள்ளுவது கூடாது. அப்படிச்செய்வதில் ஒரு உடையையே இரண்டு மூன்று நாட்கள் கட்டிக்கொள்ளும்படி ஏற்படுகிறதால் நமது ஆசாரமும் முக்கியமாக சரீரசௌக்கியமும் கெட்டுவிடுகிறதென்பது வெளிப்படை. (தொடரும்.)

C. R. S. ராகவய்யங்கார்,

ஆயுர்வேத டாக்டர், மதுரை.

ஸத்குருமகிமை.

ஆரியர்களே! ஜீவர்களான யாம் யாவரும் புண்ணியமிச்ரமான பாவகன்மத்தால் தேவ மனித மிருகாதி முதலிய சரீரங்களைப் பெற்று பகிரங்க விஷயமான வெளிநோக்கமுள்ளவர்களாகி ஆத்ம ஞானத்தை இதுகாறும் அறியாதவர்களாயிருக்கிறோம். இவ்விதம் இருந்துகொண்டு "உண்டதே உறுதி, கண்டதே காக்ஷி" என்று நினைத்துத் துக்கிகளாய், காமத்தால் லப்யமான போகமருந்தி காமிகளாய் விளங்குகிறோம். ஆற்றின் சுழலில்விழுந்து பரிதபிக்கும் கீடம் சுகமற்றதாயிருக்குங்காலை ஜன்மாந்தரபுண்ய பரிபாகத்தால் ஒரு தயாளுவான புருஷன்தோன்றி, அக்கீடத்தையெடுத்து அந்த நதிக் கரையில்உள்ள மரத்தடியில்விட, பிறகு அது ஜீவிக்கலாகும். அது போல் ஜீவர்களான யாம் பிறவிக்கடலிலமிழ்ந்து சரீரங்களாகிற சுழல்களில் வீழ்ந்து துக்கிகளாய் வருந்துங்காலை ஸத்கர்மபுஞ்சத்தால் பிரும்ம நிஷ்டனான ஸத்குருவையடைந்து பஞ்சகோச விசாரம் முதலியதால் அவரால் கரையேற்றப்பட்டு பேரானந்தமடைய வழிபடவேண்டியது தான் ஜன்மமெடுத்ததற்குப்பலனும்.

வெகுஜன்மாக்களில் செய்யப்பட்ட புண்ணியங்களின் பரிபாகத்தினல் மானிடஜன்மம்பெற்ற யாம் யாவரும் ஞானசாதனங்களைக் கைப்பற்றி மனத்தைக் களங்கமறச்செய்தல்வேண்டும். மனது அழுக்கற்றுத் தெளிவாயிருந்தால்தான் குருவின் உபதேசத்தை நிலைக்கச் செய்து யுக்திகளால் உறுதிப்பட்டு நிதித்தியாஸனத்துக்கு ஏற்றதாகும். மனம் தெளிவுபெருமல் எத்தனை விசாரங்கள் செய்தாலும் முத்திகிட்டாது.

பந்தமும் மோக்ஷமும் மனத்தாலேயே ஏற்படக்கூடியது. இஷ்டாநிஷ்டங்களும் அதினலேயே உண்டாகின்றன. மனம் நிர்மலமாயிருந்தால் மோக்ஷத்திற்கு ஹேதுவாகிறது. களங்கமுள்ளதாயின் பந்தத்துக்கே காரணமாகிறது. நிர்மலமான மனத்தால் அழிவற்றதும், அழிவற்றதுமான வஸ்துவைப் பகுத்தறியுங்கால் முக்கியமான பயன் ஏற்பட வழியுண்டாகிறது.

அப்படிப் பகுத்தறியாவிடில் அனர்த்தமே சம்பவிக்கின்றது. ஆகையால் அதைத் தெளிவுறச் செய்யவேண்டும். அதற்கு ஸாதனங்களான உபாயங்களாவன: நற்சீலமுள்ளவர்களின் அன்னத்தைப் புசிப்பது, ஈசுவரனை யாராதிப்பது, ஸாதுக்களை ஸேவிப்பது, தங்கள் தங்கள் வர்ணாசிரமங்களுக்குரிய தர்மங்களை வழுவாது நடத்துவது, புலன்களை யடக்குவது, நியமங்களை யநுஸரிப்பது, ஸாத்விகங்களான புராணங்களைக் கேட்பது, ஸாதுக்களோடு பழகுவது முதலானவைகள் ஆகும்.

ஆதலால் அவ்விதமாக சித்தப்பிரஸாதம் பெற்று ஸத்குருவைச் சரணமடைந்து அழுக்கற்ற கண்ணாடியால் பிரதிபிம்பத்தை வியக்தமாய்க்காண்பதுபோல் ஸத்குருவின் உபதேசத்தை நன்குகிரகித்துத் தன்னியர்களாவதற்கு வழிபடவேண்டும். ஆதல்பற்றி அந்த ஸத்குருவின் மகிமையைப்பற்றி இந்த வியாஸத்தால் வெளியிட முன்வருகிறேன்.

குரு, ஆசிரியர் என்ற இருபதங்கள் பரியாயபதங்களாகும். ஆனாலும் ஸ்மிருதிகளால் இவ்விரண்டிற்கும் சிறிதுபேதம் காட்டப்பட்டுள்ளது. வடமொழியில் கு என்பதற்கு அஞ்ஞானம் என்றும்ரு என்பதற்கு அவ்வஞ்ஞானத்தை நீக்குபவர் என்றும் பொருள்கூறப்படுவதால் குரு என்ற சொல்லுக்கு அஞ்ஞானத்தை விலக்கி ஆன்மஸ்வரூபத்தை விளங்கச் செய்பவர் என்றுபொருள் வெளியாகிறது.

ஆசினோதி ஹிசாஸ் திரார்த்தம்
ஆசாரே ஸ்தாபயத் யபி!
ஸ்வயமப் யாசரேத் யஸ்து
ஸஆசார்ய இதிஸ் மிருத:

என்ற ஸ்மிருதிப்படி, சீடர்களுக்கு நூல்களைக் கசடறக் கற்பித்து நல்லொழுக்கங்களில் பழக்கப்படுத்தித் தானும் வழுவாது நடப்பவர் என்று ஆசிரியர் என்றசொல்லின் பொருள் விளங்குகிறது.

நுட்பமாய் இவ்விருபதங்களின் பொருளையாராயுங்கால் அறிவின்மையை நீக்கி அறிவையூட்டிச் சீடர்களைத் தன்யர்களாகச் செய்யும் சக்தியுள்ளவர்கள் என்று ஏற்படுகிறது.

பொதுவாய் பிரவிருத்தி சாஸ்திரம் நிவிருத்திசாஸ்திரம் எனப்படும் இருவகை சாஸ்திரத்தைப் புகட்டுகின்ற தேசிகர்களுக்கு அவ்விருபதங்கள் இயல்பாயமைந்திருப்பினும் விசேஷமாய் ஆன்மஸ்வரூபத்தை நன்குபோதித்து நிவிருத்தி சாஸ்திரத்தால் பேரானந்த வெள்ளத்தில் களிக்கச்செய்யும் ஸத்குருக்களின் மகிமையையுரைக்கத் தலைப்படுகிறேன்.

ஆன்மஞானத்தை விரும்பிய ஒருவன் குருவை நாடவேண்டும். ஆசாரியனிடத்திலிருந்து பெற்ற வித்தைதான் அவித்தையையொழித்து ஆன்மஸாக்ஷாத்காரத்தை யுண்டுபண்ணுவதில் பிரதான ஸாதனமாகும். மற்றவையவ்விதமாகாஎன்று உபநிஷத்துகள் போதிக்கின்றன. இவ்விஷயத்தை ஸக்தர்ப்பத்துடன் ஆராய்வோம். அதாவது; ஜபாலையின் மைந்தனுன ஸத்யகாமன் கௌதமரைச் சரணமடைந்து உபஸதனஞ் செய்தபோது அவனை உனது கோத்திரம் முதலானவையென்னவென்று கௌதமர் வினவினர். அதற்கவன் என் பிதாவின் பெயரையறியேன். நான் ஜபாலையின் குமாரன். எனது கோத்திரம் யாதென, குருகேட்பாராயின் யாது பதிலுரைப்பேன் என்று நான் கேட்டதற்கு என் தாய்சொன்னதாவது:-பால்யத்திலேயே உன்னைப் பெற்றேன். நான் பெரியோர்களுக்குப் பணிவிடை முதலியவற்றைச் செய்யவே காலம்போதாதிருக்கும். அத்தருணத்தில் கணவனேடு பேசவே ஸமயம் எனக்குவாய்க்காது. கணவனும் சீக்கிரத்திலேயே பரலோகமடைந்தார். ஆகையால் எனக்குக் கோத்திரம் முதலானவை தெரியாது. ஜபாலையின் குமாரன் ஸத்யகாமன் என்ற பெயருள்ளவன் என்றுசொல் என்று உரைத்தாள் என்றான்.

அவ்விதமான உண்மையைச் சொல்பவன் பிராமணனாகத்தானிருக்க வேண்டும். இவன் உபதேசிக்கத்தக்க பிராமணன்தான் என்று தீர்மானித்துக்கொண்டு (அந்தேவாஸியாக)ச் சீடனாக ஒப்புக்கொண்டார்.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,

சமஸ்கிருத பண்டிதர்.

ஸ்ரீ

அரும்பொருட்டிரட்டு.

ஆத்மாவுக்கு அசித்தின் சேர்க்கை.

1. அயப்புண்டத்தை அக்னியினருகே வைத்தால் அக்நி பரமாணுக்கள் ஸூக்ஷ்ம ரூபேண அதிலே ஸங்க்ரமித்தாதல் வாஸநையாலேயாதல் அதினுடைய ஔஷ்ண்ய ஸ்வபாவத்தையும் நிறத்தையும் பஜித்து அதுதானென்னலாமா போலே இவ்வாத்மாவும் அசித் ஸம்ஸர்க்கத்தாலே அது தானென்னலாம்படி அசித்கல்பமான படி. பரமாணுப்பற்று சிவப்பு மாறினாலும் வாஸனையாலே சுடும்.

விஷயப்ராவண்யம்.

2. பாம்பு படத்தை விரித்துக்கொண்டு நின்றால் அது அள்ளிக் கொள்ளப்புகுகிறதறியாதே அதின் நிழலிலே யொதுங்கத் தேடுமாபோலேயிருப்பதொன்றிறே.

விஷயாநுபவத்தால் பிறக்கும் ஸுகம்.

3. உயிர்க்கழுவிலே யிருந்தவன் பிபாசையும் வர்த்தித்துத் தண்ணீரும் குடித்துப் பிறக்கும் ஸுகம்போலேயிறே விஷயாநுபவத்தால் பிறக்கும் ஸுகமாகிறது. துக்கங்களிலேயொன்றை ஸுகம் என்று நிர்வஹித்துக் கொள்ளுகிறானித்தனையிறே.

பெரியவாச்சான் பிள்ளை.

மதிப்புரை.

வைசியன்.

இப்பத்திரிகை ஆரிய ஆயிரக்காசுக்காரவைசியர்களால் நடத்தப்பட்டுவருகின்றது. இதற்குப்பத்திராதிபர் S. V. K. வீரபத்திரன் செட்டியாரவர்களாவர். இப்பத்திரிகையில் நல்ல விஷயங்கள் பலபேர்களாலும் எழுதப்பட்டிருக்கின்றன. ஜாதி விஷய விளக்கமதிகமாக இருக்கின்றது. தமிழ்நடை எல்லாரும் வாசிக்கத்தக்க எளிய நடையிலிருக்கின்றது. இதன் வருடச்சந்தாரூபா 2—0—0.

ஆத்மசக்தி.

இப்பத்திரிகை உலகிற்கு வேண்டிய அரியபெரிய விஷயங்களைக் கொண்டிருக்கின்றது. எளியநடையில் வரையப்பட்டிருக்கின்றது. இப்படிப் பலபத்திரிகைகள் உலவவேண்டியது அத்தியாவசியமாம். இதன் வருடசந்தா வெளியூர்களுக்கு ரூ. 1—0—0. உள்ளூர்க்கு ரூ. 0—12—0. வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0.

பொது சமாசாரம்.

—*—

ஓர் அரிய விஷயம்.

நிகழும் உருத்திரோத்காரிளுு மார்கழிமீ கிருஷ்ணபக்ஷம் அஷ்டமிதிதியில்நடந்தேறிய ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுவாருடையவிருஷப் வாஹனக்காட்சியமைந்த சப்பாத்தில் முன்புறத்தின் இரண்டுபக்கங் களினும் கட்டப்பட்டிருந்த வாழைக்குலைகள் மிகவும் விநோதமானவை.

அக்குலைகள் உண்மையில் ஆறடி நீண்டுள்ளன. ஏறக்குறைய ஓரடிச்சுற்றளவுடையன. இடைவெளியின்றி வரிசையாக நெருங்கிய சீப்புக்களையுடையன. ஒருவிரற் பருமனுள்ள காய்களையுடையன. காய்கள் எண்ணிக்கையற்றன. இடையில் ஒருநூர்க்கும் நுழைய இடமில்லாதது. காய்களின் நுனியில் புதைந்து விளங்கும் பூவினையுடையது. கண்டோரனைவரும் இது இயற்கையன்று; செயற்கையே என்றுமருண்டு நெருங்கிப் பார்த்தபிறகு இயற்கை வாழையே என்று தெளிந்தார்கள்.

இது இராமநாதபுரம ஜில்லா முறையூர் சப்டிவிஷன் ஜமீந்தாரும் அருங்கலை விநோதரும் பரோபகாரியும் அருமைப் பொருளைச் சேர்க்கும் அவாவுடையருமாகிய கனம் பழ. சி. சண்முகஞ்செட்டியாரவர்கள் பர்மாத்தீவிலிருந்து கொணர்ந்து தமது முறையூர்த் தோட்டத்தில் வைத்துப் பயிர்செய்வித்து வளர்த்துத் தார்விட்டதை ஷை அஷ்டமி விழாவில் சுவாமி சப்பாத்தில் சமர்ப்பித்தார்கள்.

"இல்லாதன இல்லை யிளங்குமார"